ஓம்

விநாயகநம

# சந்திர தீபம்

RECEIVED

தவத்தைப் பெருக்கவும், தர்மத்தைக் காக்கவும், சிவத்தைப் பேணவும், திருவருள் பூண்டது.

இதழ் - 2 காலயுத்திவருஷம் ஆவணி மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை [8-9-1978] சுடர் - 1

## தேவர்கள் போற்றும் சீலம் பெரிதும் உடையவன் சிவன்

### ஆதலின் சீலமில்லாதவர் எவராலும் சிவனை அறிய முடியாது. அன்றியும் உணரவும் முடியாது. சீலம் என்பது நீரை வாய்க்காலால் பாய்ச்சி வேண்டிய இடத்து செலுத்துவதற்கு வாய்க்கால் வரம்பு போன்றது

### சீலம் இல்லாவழி எந்த ஒரு செயலிலும் அருள் பெறமுடியாது. சினிமா ஒலிபெருக்கி வானொலி வேடிக்கை இவையாவும்

# சிவ சீலம் உடையன அன்று

சீலமே வடிவானவன் கடவுள். அவனுடைய சீலத்தைத் தான் தேவர்கள் போற்றுவார்கள். கடவுள் பிறப்பில்லாதவர் இறப்பில்லாதவர். என்றுமே உள்ளவர். எல்லாம் அறிபவர் என்றதாக வேதங்கள் அவனைப் போற்றுவன. நித்தலும் பூவும் நீரும் கொண்டு நியமமாக போற்றும் புண்ணியர்கள் அவன் காண்பரியவன் கருணை உடையவன் சீலமே பெரிதும் உடையவன் எனவே மொழிந்துள்ளனர். அத்தகைய பெருமக்களாம் புண்ணியத்தின் விளைவுடைய நாயன்மாரை இவ்வுலகில் நாம் உய்ய நாடு உய்ய போற்றிப் பாடி நம்மை உய்யக் கொண்டவர் நம்பிரான் சுந்தர மூர்த்தி சுவாமிகள். அவர் வருகை உலகம் உய்ய வந்த வருகை யாகும். அப்பெருமானுர் காஞ்சியில் அமர்ந்தருளி காமாட்சி அம்மையின் பூசனையை நித்தலும் மகிழ்ந்து ஏற்றிருக்கும் கண்ணும் மூன்று உடைய கடவுளைத் தரிசித்து இழந்த தன் கண் பெற்றுப் பாடிய திருப்பதிகம் ஒன்றைக் கீழே தருகின்றோம்.

ஒலிபெருக்கியாலும் பாட்டுக் கச்சேரியாலும் பிரசங்கத்தாலும் புனிதமுடைய நைமித்தியக் கிரியைகள் இன்று தத்தமக்குரிய சீலம் கெட்டு பிரசங்கியார்க்காக கோவிலை அலங்கரித்து பாட்டுக் கச்சேரிக்காக கோவிலையும் கூட்டித் தள்ளி கோவில் என்றால் திருவிழாச் செய்ய பாட்டுக் கச்சேரி வைக்க என்ற கொள்கை மிகுந்த காலத்தில் திருவிழாவிலும் பாட்டுக் கச்சேரியிலும் பிரசங்கத்திலும் சீலம் தான் பெரிது. அதனை சிவன் உகந்து கொள்பவன் என்பதை நன்கு தெளியும் பொருட்டு இப்பாடலை ஓதி எம் இனம் மதம் இரண்டும் பெருமைபட வாழ்வது நம்மவர் ஒவ்வொருவரின் கடமையாகும்.

ஆலந்தான்உகந் தமுதுசெய் தானை ஆதியைஅம ரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச் சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக்கம்பனெம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

நஞ்சினை மகிழ்வுடன் ஏற்று உண்ட ஆதியான பெருமானை தேவர்கள் தொழுது போற்றும்படியான சிறந்த சீலத்தினையே பெரிதாகத் தம்மிடத்துக் கொண்டவனை; சிந்திப்பார் அவர்களது சிந்தையில் உட்பொருளாயவனை; அழகுடன் நறுமணம் கமழும் கூந்தல் உடைய உலகமாதாவாகும் உமையம்மை என்றும் ஏத்தி வழிபடப் பெற வீற்றிருந்து அருளும் காலனுக்கு முடிவைச் செய்யும் காலகாலனை திருக்கச்சி ஏகம்பத்து அமர்ந்தருளும் என் அப்பனைக்காண நான் கண் பெற்றவாறு என்ன அற்புதமாமோ? 1

உற்ற வர்க்குத வும்பெருமானை ஊர்வதொன்றுடை யான்உம்பர் கோனைப்
பற்றினார்க்கென்றும் பற்றவன் றன்னைப் பாவிப் பார்மனம் பாவிக்கொண்டானை
அற்றமில்புக ழாள்உமை நங்கை ஆதரித்து வழிபடப் பெற்ற
கற்றை வார்சடைக் கம்பனெம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

எல்லாம் அற்று தன்னையே நினைக்க தொண்டு கொள்வார் அவர்க்கு உதவுகின்ற பெருமானை ஊரும் இடபத்தை வாகனமாக உடைய தேவாதி தேவனை சிவனை அவனைப்பற்றினார்க்கு என்றும் பற்றாக உள்ளவனை தம்மை அவனாகப் பாவிப்பார் மனத்தில் தானே யாகப்பரந்து கொண்டவனை; ஏதுமோர் வசையிலாத புகழுடைய எம் அம்மை உமையவள் ஆதரித்து வழிபடப் பெற்று மகிழ்வுடன் அமர்ந்த கற்றையாக வார்ந்த சடையுடைய திருக்கச்சி ஏகம்பத்து பெருமானை காணக்கண் அடியேன் பெற்றவாறு என்ன அற்புதமாயது. 2

திரியும் முப்புரம் தீப்பிழம் பாகச் செங்கண் மால்விடை மேற்றிகழ் வானைக்
கரியின் ஈருரிபோர்த்துகந் தானைக் காம னைக்கன லாவிழித்தானை
வரிகொள் வெள்வளை யாள்உமை நங்கை மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை எங்களைப் பிறானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம ப பா

சுழன்று திரிந்து துயர்புரியும் முப்புரமும் நெருப்பின் பிழம்பாக பொடிபடச் செய்து சிவந்த கண்ணுடைய இடபமேல் திகழ்ந்திருக்கும் பெருமானை யானையின் பெருந்தோல் போர்த்து மகிழ்ந்த கடவுளை மன்மதன் நெருப்பாக எரிந்து பொடி பட பார்த்தருளிய பகவானை; வரி கொண்ட வெள்ளை வளையல் அணிந்த எம் அம்மை உமையவள் போற்றி வழிபாடு செய்யப் பெற்ற பெருமையானை; பெரிய ஏகம்பத்து அமர்ந்த எங்கள் பெருமானை காணும் படி கண் அடியேன் பெற்றவாறு என்ன அற்புதமாமே. 3

குண்ட லந்திகழ் காதுடை யானைக் கூற்று தைத்த கொடுந்தொழி லானை
வண்டலம்புமலர்க் கொன்றையி னானை வாள ராமதி சேர்சடை யானைக்
கெண்டை யந்தடங் கண்ணுமைநங்கை கெழுமி ஏத்தி வழிபடப்பெற்ற
கண்டம் நஞ்சுடைக் கம்பனெம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

குண்டலம் திகழும் காதுடைய பெருமானை; யமனை உதைத்த கொடுந் தொழில் கொண்டவனை: வண்டுகள் மகிழ்ந்து பாடும் மலராய கொன்றையினை அணிந்தவனை; வாழ்போல் பல்லுடைய நாகமும் மதியமும் சேர்ந்த சடையுடைய கடவுளை; கெண்டை மீன் போலும் விசாலித்த கண் கொண்ட உமை எம் அம்மை அவனைக் கூடி ஏத்தி வழிபாடு செய்யப் பெற்ற கண்டமும் நஞ்சாக உடைய ஏகம்பத்தமர்ந்த எம் கடவுளை காணக் கண் அடியேன் பெற்றவாறு என்ன அற்புதமாமோ. 4

வெல்லும் வெண்மழு ஒன்றுடை யானை வேலை நஞ்சுண்ட வித்தகன் றன்னை
அல்லல் தீர்த்தருள் செய்யவல் லானை அரும றையவை அங்கம்வல் லானை
எல்லை யில்புக ழாள்உமைநங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்லகம்பனை எங்கள்பி ரானைக் காணக் கண்அடியேன்பெற்ற வாறே.

எதனையும் வெல்லுகின்ற வெண்மை ஒளி சிறக்கும் மழுவாயுதம் ஒன்று உடையவனை; கடலிடத்துப் பெற்ற நஞ்சினை உண்டு தேவரை இறவாமையில் மீட்ட வித்தகமுடைய பெருமானை; எமது எந்தவித அல்லலையும் தீர்த்து அருள் செய்ய வல்லமை உடைய கடவுளை: அரிய வேதங்கள் அங்கங்கள் அனைத்தும் தானே தெரிய வல்லவனை; எல்லையில்லாத புகழுடைய எம்பெருமாட்டி உமை என்றுமே பூவும் நீருடன் போற்றி வழிபடப் பெற்ற நன்மையே தரவல்ல ஏகம்பத்தமர்ந்த நாதனை; எங்கள் பெருமானை; காணக் கண் அடியேன் பெற்றவாறு என்ன அற்புதமாமோ. 5

திங்கள் தங்கிய சடையுடை யானைத் தேவதேவனைச் செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடை யானைச் சாம வேதம் பெரிதுகப் பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு மருவி ஏத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பனெம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

இளம்பிறை தங்கிய சடையுடைய கடவுளை; தேவர்க்கெல்லாம் சிறந்த ஒரு கடவுளை; செழுமை மிக்க கடலிடத்து வளரும் சங்கினில் செய்த வெண் தோடு அணிந்த காது உடையவனை; சாம வேதப்பாடலை பெரிதும் உவப்பவனை; எம் தாயாய பெண் உமை மங்கை மலையரசன் புத்திரி தனித் தவத்தால் கண்டு தெளிந்து; அவனை அணைந்து போற்றி நித்தலும் வழிபடப் பெற்ற கங்கை ஆறு அணிந்த கடவுளை; திருஏகம்பத்து எமபெருமானை காணக் கண் அடியேன் பெற்ற இந்த வரலாறு என்ன அற்புதமாமோ அதனை நான் அறியேன். 6

விண்ண வர்தொழு தேத்தநின் றானை வேதந் தான்விரித் தோதவல் லானை
நண்ணி னார்க்கென்றும் நல்லவன் றன்னை நாளும் நாம்உகக் கின்றபி ரானை
எண்ணில் தொல்புக ழாள்உமை நங்கை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்றுடைக் கம்பனெம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

தேவர்கள் தொழுதுபோற்ற நின்ற செல்வனை எவர்க்கும் அறியாத வேதங்களை எவரும் அறிய விரித்தோத வல்லானை; தன்னை அடைந்து நண்ணிக் கொண்டார்க்கு என்றும் மிக நல்லவனை; நாளும் நாளும் நாம் உகந்து விரும்பும் பெருமானை; எம்மால் எண்ணவும் முடியாத முன்னைய காலந்தொட்டு நீண்ட புகழுடைய எம் அம்மை உமை என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற கண்களும் மூன்று உடைய கடவுளாம் திருக்கச்சிஏகம் பத்தமர்ந்த தெய்வத்தை காணுதிருந்த என் கண் காணும்படியாக கண் பெற்ற வரலாறு என்ன அற்புதமாமோ. 7

சிந்தித் தென்றும் நினைந்தெழு வார்கள் சிந்தை யில்திக ழுஞ்சிவன் றன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப் பாலோ டானஞ்சும் ஆட்டுகந் தானை
அந்தமில்புக ழாள்உமை நங்கைஆதரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பன் எம்மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

தன்னையே சிந்தித்து என்றும் நினைந்து தம் வாழ்வே அதாக எழுந்து கொள்வார்கள் சிந்தையில் திகழும் சிவனை எமமைப் பந்தித்து; விட்டு நீங்கமுடியாதபடி இறுகப் பிணித்து நின்று எம்மை ஆடி ஒடி அலைந்து உலைந்து துயர் உறவைக்கும் வினைகளின் கட்டுக்களை அறுப்பவனை பாலுடன் பசுவிடம் பெறப்படும் தயிர் நெய் சலம் சாணம் ஆய ஐந்தையும் திருமஞ்சனமாட்ட அதனை விரும்பி மகிழ்ந்து ஏற்பவனை; எல்லையில்லாத புகழுடைய எம் பெண் அரசி உமையவள் என்றும் ஆதரவுடன் வழிபாடு செய்யப் பெற்றருளிட வாசம் கமழும் வார்ந்த சடையுடன் திருக்கச்சி ஏகம்பத்து அமர்ந்தருளும் எம் கடவுளை காணும் படி காணுத என் கண்கள் காணப் பெற்ற வரலாறு என்ன அற்புதமாமோ. 8

வரங்கள் பெற்றுழல் வாளரக் கர்தம் வாலி யபுரம் மூன்றெறித் தானை
நிரம்பிய தக்கன் றன்பெரு வேள்வி நிரந்த ரஞ்செய்த நிட்கண் டகனைக்
பரந்த தொல்புக ழாள்உமை நங்கைபரவி ஏத்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பன்எம் மானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

முன்னமே தன்னிடத்து உலகை ஆள வரங்கள் பெற்று அந்த ஆசையால் உழன்று உலகைத் துயர் உறுத்திய வாழ்போலும் பல்லுடைய அரக்கர்களின் அத்தொழிற்கு வாய்ப்பாக இருந்த முப்புரத்தினையும் எரித்து அருள்செய்த பெருமானை; செல்வத்தாலும் இறுமாப்பாலும் நிரம்பிய தக்கன் எனும் அந்தணனின் பெரும் யாகத்தை நீர்மூலமாக அழித்தொழித்து நின்ற கொடுமை இலாத பெருமானை; எங்கும் பரந்த மிகப்பழமையான புகழுடைய எம் அம்மை உமையவள் போற்றிப் புகழ்ந்து பணிந்து வழி படப்பெற்ற கைகளும் எட்டுடைய திருக்கச்சி ஏகம் பத்தமர்ந்த எம் ஐயனை காணுத என் கண் காணும் படி பெற்றவரலாறு என்ன அற்புதமமோ. 9

எள்கல் இன்றிஇமையவர் கோனை ஈசனைவழி பாடுசெய் வாள்போல்
உள்ளத் துள்கி உகந்துமை நங்கை வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங்காட்டி வெருட்டிட அஞ்சி வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக்கம்பனை எங்கள் பிரானைக் காணக் கண்அடி யேன்பெற்ற வாறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மபபா

திருக்கைலாய மலையில் தன்னுடன் இருந்த பெருமானிடம் மிக்க ஆசரவுடன் வேதங்களின் உண்மைப் பொருளைக் கேட்டாள் எம் அம்மை உமை. கேட்டபின் வேதங்கள் சொல்லிய எல்லாக் கிரியைகளிலும் பூவும் நீரும் கொண்டு தன்னை இந்த மண்ணுலகில் வந்து வழிபாடு செய்தலே மிக மேலான செயல் எனத் தெளிந்து கொண்டாள். இதற்குப் பின்பாக அவரிடம் திருக்கைலையில் இருந்த தான் இப்பூவுலகில் வந்து பூவும் நீரும் கொண்டு தன் நாயகன் சிவனைப் போற்றுதல் குறைவான செயல் என்று எண்ணுது இப்பூவுலகில் தாம் வருதற்கு சிவனிடம் விடை பெற்றுக் கொண்டு இங்கு மனித உருவில் எம்பெருமாட்டி வருகின்ருள் தாய் தன் குஞ்சுகளான உயிர்கட்கு இது தான் வழி எனக் காட்ட எண்ணினளோ எம்பெருமாட்டி அறியோம் இப்பூவுலகில் வந்து தனது நாயகனைப் போற்றுதலை விரும்பித் துணிகின்ருள். அவ்வாறு வந்த எம் அம்மை காஞ்சியினை அடைந்து பதுமன் என்னும் நாகம் குடி கொண்ட அந்த இடத்தில் கோயில் கொண்டு எம்பெருமானைப் பெற நித்தலும் தவம் செய்கின்ருள் நெஞ்சம் ஈசனைக் காணவே விரும்பி நிரந்தரம தம் திருவாக்கினில் தன் நாமமே சொல்லித் தவமிருந்த பெருமாட்டிக்கு தன்னைக் காண்பித்தருள வஞ்சனை நீங்கிய அந்த மாமரததின் அடியில் மலைமகள் உமையம்மை கண்டு கொள்ளும் படியா சிவலிங்க வடிவாக வந்து தோன்றினர் எம் கடவுள். அவ்வாறு தான் தவத்தாற் பெற்ற கடவுளை தேவர்க்கு நாயகனை எல்லார்க்கும் தெய்வத்தை ஏதும் ஒரு இகழ்ச்சி இன்றி வழிபாடு செய்வாள் போல எம்பெருமாட்டி உமை தம் உள்ளத்தால் மிகவும் விரும்பி மகிழ்ந்து அதற்குரிய சீலமுடன் வழிபடச் சென்று நின்ற அத்தன்மை கண்டு எம்பெருமாட்டியுடன் திருவிளையாட்டாக அங்கு பக்கரில் ஓடிய கம்பை ஆற்றை ஒரே வெள்ளப் பெருக்காக பெருகும் படி காட்டி அவள் பூசை செய்ய விடாதபடி வெருட்டிட அது கண்டு அம்பாள் பயந்து வெருக்கொண்டு ஓடி நான் என் செய்வேன் என் ஐயனே உன்னை அன்றி யாரும் துணை இல்லை என்று திருவுருவத்தை இறுகத் தழுவிக் கொள்ள அச்சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு அவளுக்கு தன் மணவாளக் கோலங் காட்டியருளிய பெரிய கள்ளனை; திருக்கச்சி ஏகம்பத்தமர்ந்தானை எங்கள் பெருமானை காணும் படி காணுத என் கண் காணப் பெற்ற வரலாறு என்ன அற்புதமாமோ.

குழந்தைகள் தாயிடத்தில் தான் அன்பு கொள்வது இயல்பு. ஆன தன்மையினுல் தன் தாயை வெருட்டிப் போட்டார் தன் தந்தையானவர் என்பதற்காக தன் தந்தையை கள்வன் என்றே சொல்கின்ருர் போலும் இப்பாடலில் எம்மை முழுவதும் உய்யக் கொள்ளும் எம் பெருமான் சுந்தரர் நம்பியாரூரர். 10

பெற்றம் ஏறுகந் தேறவல் லானைப் பெரிய எம்பெரு மான்என்றெப் போதும்
கற்ற வர்பரவப்படு வானைக் காணக் கண் அடி யேன்பெற்ற தென்று
கொற்ற வன்கம்பன் கூத்தன்எம்மானைக் குளிர்பொ ழில்திரு நாவலா ரூரன்
நற்றமிழ் இவைஈ ரைந்தும் வல்லார் நன்னெறிஉல செய்துவர் தாமே.

பசுவினுடைய தலைவனுன இடபத்தை விரும்பி அதன்மீது ஏறிட வல்லமை உடையவன்; அவனே பெரியவன் எம் பெருமான் என்று எப்பொழுதும் கற்றவர்களால் போற்றப் படுகின்ற கடவுளை சிவனை காணும் படி காணுதகண் காணப்பெற்றேன் என்று எவர்க்கும் மேலானவனை கச்சிஏகம்பத்தமர்ந்தவனை உலகுய்ய நடமாடுபவனை. சிறந்தஅருள் உடைய பெருமானை குளிர்ந்த சோலை சூழ்ந்த திருநாவலூரில் அவதரித்த ஆருரன் சொல்லிய நல்ல தமிழ் இவைபத்து கற்று வல்லவர் நல் நெறிகொண்ட உலகினை அடைவார்கள். 11

## பதிகவரலாறு

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கிலியாரைத் திருவொற்றியூரில் கண்டு காதலித்து அவரைத் திருமணம் செய்வதற்கு அவரைப் பிரியமாட்டேன் என்று சத்தியம் செய்து கொடுத்தார். ஆனுல் அன்று ஒரு நாள் திருவாரூரை மிக நினைந்து தனது சத்தியத்தையும் மீறி திருவாரூர் போக நினைந்து திருவொற்றியூர் எல்லையைத் தாண்டலும் தனது கண் இரண்டும் கெட்டது. அவ்வாறு இரண்டு கண் பார்வை இழப்ப கைதருவார் உதவியுடன் திருவாரூர் வருசின்ருர். வருகின்ற வழியில் தான் காஞ்சியில் சென்று எம்பெருமானைத் தரிசித்து இழந்த கண்ணில் ஒன்று பெற்றுக் கொள்கின்ருர். கண் பெற்ற பின் பாடியருளிய திருப்பதிகமே மேலே தரப்பட்டதாகும்.

# நால்வர் காட்டிய அறநெறி அல்லால் நமக்குத் துணை வேறில்லை.

ஞானசம்பந்தர் நாவுக்கரசர் சுந்தரமூர்த்தி சுவாமிகள் மாணிக்கவாசகர் இவர்களே சைவமக்களது குரவர்கள். அடுத்து திருமூலரும் அப்படியே

## யாழ்ப்பாண மக்களே! நீங்கள் உய்தி அடைய விரும்பின் அடக்கமுடைய நிதானமான வாழ்க்கையை நடத்த முற்படுங்கள். தவத்தையும் தருமத்தையும் பெருக்குங்கள். அவைதான் சுதந்திரமடைய வழிகாட்டும்.

ஒருவனுக்கு உண்மையாமபடி துணையாது என்றுல் அது அவனுடைய தருமமே. இதற்கு எட்டுணையேனும் சந்தேகம் தேள்வையில்லை. நமது முன்னோர் இதனை மிகு நன்குடன் தெளிந்து நமக்குச் சொல்லி வைத்துப் போயினர். இந்த உண்மை எக்காலத்தும் பொதுவாக உள்ளது.

தமிழ் மக்களாய எமக்குப் பொதுவாக ஓர் நல்மரபு உண்டு. அவை தான் பெரும்பாலும் சைவ மக்களாய நாம் தெளிந்து நடந்து கொள்ள வேண்டியது. இன்றைய உலகில் வாழும் ஒவ்வொருவருடைய முதற் கடமையும் அதுவேயாகும். அது யாதெனில் நமது முன்னைப் பெரியோரது கொள்கைகளை சீலங்களை வழுவாது பாதுகாத்தலும் இன்று நாம் அவர் காட்டிய அறநெறிப்படி நடந்து நமது பிற்சந்ததியார்க்கு வழி காட்டிகளாக அமைவதுமாகும்.

இந்த ஒருவகையாக நடத்தல் தான் பெரும் தருமமாகும் என்று தெல்லிப்பழையைச் சேர்ந்த ஓர் ஆசிரியர் எம்மிடம் தெரிவித்தார். இதை எல்லாரும் உணரவேண்டும்.

திருமுருககிருபானந்தவாரியார் சினிமாநடிகர். சாயிபாபாசுவாமியும் அதே தன்மை மிக்கவர். அவரைப் பின்பற்ற முயன்ருல் உங்களுக்குத் தான் துயரம் மீள மீளப் பெருகும். இதை உண்மை என்று தெளியுங்கள். அருணகிரிநாதர் முருகனைப் பேசும் போது

**நினை வணங்கும் பத்தர் அனைவரும் தழைக்க நெறியில் நின்ற வெற்றிக் கதிர்வேலா**

முருகனே நெறியில் நிற்கின்ருன் தன்னை வணங்கும் பக்தர் தழைத்திட எனச் சொன்ஞல் முருகன் சினிமாவிலும் நடித்துக் காசும் வாங்கினுல் அவரைக் கும்பிடுவார் நன்மை பெறுவாரோ? சிந்தித்துப் பாருங்கள், சினிமாவில் நடிப்பவரை சடையும் வைத்துக் கமரா முன் தன்னைக் காட்டும் சாயிபாபா சுவாமியை அவர் நடத்தையை நன்கு நேரில் கண்டு கொண்டும் உங்களிடம் அறிவிருந்தும் அதனை உண்மையாம்படி பாவித்துத் தெளிய முடியாது கிருவானந்தவாரியாரை சாயிபாபாவை அறநெறி நின்ற பெரியோர் என்று அறிவிலாத மாக்கள் சொன்னுல் நால்வருடைய சீலம் நன்கு உணரப் பெற்ற நாம் அதை ஏற்கத் தயாராக இல்லை. இவை எல்லாம் இன்று பெரும் ஏமாற்று வித்தையாக உலகைப் பெரும் துயரநிலையில் வைப்பதாக இருக்கின்றது. அதை நாம் சிந்தித்தேயாக வேண்டும்.

சில காசுக்கார வியாபாரிகள் அல்லது பணம் படைத்த மிலேச்ச நாகரீகத்தைத் தங்கள் பெரும்பாக்கியமாகக் கொண்டு கடவுள் என்ருல் என்ன என்று தெரியாத மக்கள்; இவர் யாவரும் சைவநெறி சிவனடியார் மகத்துவம் தெரியாதவர்கள்; அவருடைய வேடம் பேச்சு அவை கண்டு அவர்களைப் பெரியார் என ஏற்கலாம். ஆனுல் பெரியபுராணத்தை நன்கு விளங்கித் தெளிந்து நல்ல சீலமுடன் ஒழுகி அருளைப் பெற முயலும் உண்மை நிற்கும் பெரியோர் இவர்களை ஒருபோதும் பெரியோர் என ஏற்கவும் மாட்டார் அன்றிச் இவர் வழிச்சாரவும் மாட்டார்கள்.

கேடும் செல்வமும் இரண்டும் கெட்ட மேலாம் திருவுடையவரும் ஓட்டையும் பொன்னையும் ஒப்பவே நோக்கி நின்று;

ம ப பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பு வெறுப்பு இவையாவும் கடந்து முற்றிலும் தம்மை அன்பு வடிவாக மாற்றி உண்மை உணர்ந்த மேன்மக்களாகும் அடியவர்கள் தான் வழிபாட்டுக்குரியவர். அத்தகைய பெருமக்களை: உண்மை தெளிந்த ஞானிகளைப் பின்பற்றி ஒழுகினுல் அதனுல் நீவிரும் உய்வீர். நாடும் நற்பண்புடைய மக்களாகி ஓங்கி சுதந்திரம் அடையும். அதுவன்றி பொன்னிற்கும் பொருளுக்குமாகத் தன்னை விற்கும் பிரசங்கிகளை நீங்கள் பின்பற்றுவது உங்கட்கு என்றுமே உயர்வு தரப்போவதன்று. பாட்டும் பேச்சும் சுதந்திரம் தேடித் தருவதன்று. தவமும் தருமமும் சீலமும் தான் ஆன்ம சுதந்திரத்தையும் நாட்டின் சுதந்திரத்தையும் பெற்றிட வகை செய்வன. கடவுட் தன்மை என்ருல் பேச்சு வடிவாலும் பாட்டின் இனிமையாலும் அலங்கார வேடத்தாலும் வருவதன்று. அது நல்லொழுக்கத்திஞலும் உயர்ந்த சீலமுடைய கொள்கைகளை கடைப் பிடித்து வரும் தவத்திஞலும் அடையப் பெறுவது. நால்வர் பெருமக்கள் இதனை வலியுறுத்தி உள்ளனர். நால்வர் வாக்கியங்களை நம்பினுல் அதன்படி ஒழுகினுல் கோயில்களையும் அவர் காட்டிய நெறிப்படி பேணினுல் நீவிரும் உய்வீர் அடிமை விலங்கும் நீங்கும் நாடும் பகை பிணி வறுமை முதலிய அல்லல் நீங்கி சுதந்திரமடையும். தவத்திற்கு பொய்மையே பெருக்கும் சினிமா பாதகமாவ தென்பதை முன்னுக நீர் உணர்ந்தால் பின்னர் எல்லாம் தெளிவுறும். நால்வர் காட்டிய நெறியையும் நன்கு உணர்ந்து நமக்கேற்படும் அல்லல்களையும் கண்டு தெளிந்து நமது நிலையில் இது தான் வழி என்று துணிவுடன் சொல்லுகின்றேன். இதுவே துணிவெனக் கொள்ளுங்கள். நீவிர்கள் முதற்கண் கோவிலில் முறையான பூசைகளை நடத்திவர வகை செய்து வழிபட்டு வர முற்படுங்கள். அது தான் நால்வர் காட்டிய அறநெறியின் முதல் நெறியாகும். நாடு நலம் பெறவும் நம் வருங்கால சந்ததியார் நன்னெறிப்பட்டுய்ய இதுவே வழியாகும். இனி உங்கள் விருப்பம்.

இன்று புலவராயினும் பண்டிதராயினும் எவராயினும் எதற்கு அவாவு கின்றனர் என்ருல் ஒரு மேடைக்கும் புகழுக்குமே அவாவுகின்றனர். இந்த ஒரு அவா கற்றவரான அவரைக் கெடுத்து தத்தமக்குரிய நன் நிலையின் சீலங்களைக் கெடுத்து பொய் வஞ்சனை முதலிய பாதகச் செயல்களுக்கு ஆளாக்கி அவரை கீழ்மை படச் செய்வதைக் கண்ணுல் காணமுடிகின்றது. வயது முதிர்ந்த நேரத்திலும் மக்கள் மதிப்பையும் ஓர் பட்டாடையும் பெறவே எல்லாரும் விரும்புகின்றனர்.

மக்கள் கடவுளர் அன்று. மக்கள் எப்போதும் உண்மை உணர்ந்தவராக இருக்கின்ருர் இருக்கப் போகின்ருர் என்று சொல்ல முடியாது. இந்த உண்மையை பெரிய புராணத்து சேக்கிழார் நமக்கு மிகு உறுதியுடன் காட்டுகின்ருர்.

காரைக்கால் அம்மை இறைவனிடம் பேய் வடிவம் வேண்டிப் பெற்றுக் கொள்கின்ருர். அவர் பேய்வடிவுடன் தெரு வீதியால் போய்க்கொண்டிருக்கும் போது தெருவால் போகும் மக்கள் அவரைக் கண்டு பேய் பேய் என்று கூறிக் கொண்டு வெருண்டு ஓடினர். அப்பொழுது அவர் நிலை கண்ட காரைக்கால் அம்மை என்ன சொன்னுள் என்ருல் தேவர்கட்கு எல்லாம் நாயகரான சிவன் என்னை அறிவார் என்ருல் ஏதும் நன்மை உணராத எட்டுத் திசை மாக்களுக்கு (மக்கள்) நான் எந்த உருவாயிருந்தால் என்ன என்றே சொல்லுகின்ருர். அதன் தாற்பரியத்தை நன்கு சிந்தித்தால் மக்களை மாக்கள் என்றே சொல்லப் படுகின்றது. ஆகவே உலக மனிதர் எப்பொழுதும் உண்மை உணர்பவர் அன்று என்பது தெளிவாகின்றது. இதற்காகத் தான் உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு என்ற வாக்கியம் வந்து கொண்டது. உயர்விற்கு தனித்த ஒரு பண்பு நெறி நிதானம் உண்டு. ஆனுல் மக்களாம் மாக்களுக்கு அது இல்லை. அதனுல் பெரும்பாலும் இன்று பெரிது சிறுது எனப் போற்றப் பெறுவார் எல்லாரும் புகழ் வலையில் சிக்குண்டு தவிக்கின்றனர். ஒரு பெரியவர் நெறி தவறினுல் ஒரு பெண் தனது கற்பு நெறி பங்கப் பட்டது போலவேயாகும். இதைத் தான் வள்ளுவரும் அருள் அற்ருர் அற்ருர் மற்று ஆதல் அரிது என வலியுறுத்தி உள்ளார். திருமுருக கிருபானந்த வாரியார் முருகனுடைய ஆள் நான் என்று பேசுருர். அவருடைய பேச்சு பலருக்கு இனிக்குது. அதைக் கேட்க விழுந்து கட்டி மேலே சொல்லிய வகை மக்கள் கூட்டம் ஓடிப் போகின்றது. அது தவறில்லை. அவர்கள் நிலையை பெரிய புராணம் மிக மிகத் தெளிவு படுத்திக் காட்டுகின்றது. ஆகவே மக்களோ மாக்களோ அவரைத் தெய்வமாகக் கொள்ளலாம் தேங்காய் உடைக்கலாம் கற்பூரம் கொளுத்தலாம் எனக்கு ஒரு நட்டமும் இல்லை. ஆனுல் அவரை நால்வர் வழி தெளிந்த அறமுடையவர் என்று என்னுல் சொல்ல முடியாது.

நால்வர் வழி வேறு இவர்கள் வழி வேறு. பெரும்பாலும் இவர்கள் விலாசக் காரர். அடுத்து சீர்காழி சுந்தராம்பாள் சுப்புலட்சுமி முதலிய இசையாளர் பலரும் இசையாளரே ஒழிய மேற் கொண்டு அவர்களை ஓர் தெய்வீக முடையவர் அன்று என நான் துணிந்து சொல்வேன்.

காஞ்சி காம கோடியை பெரிய வாள் என்று பெயரிட்டு அழைத்து ஏதோ மதிப்பு எல்லாம் கொடுக்கிறது கல்கிப் பத்திரிகை. இன்னும் ஆனந்த விகடன் முதலிய பத்திரிகைகளும். காஞ்சிப் பெரிய வாளும் கல்கிப் பத்திரிகை மூலம் ஆசி மொழிகள் உலகிற்கு தருகின்ருர். ஆனுல் கல்கி ஆநந்தவிகடன் பத்திரிகை அட்டைப் படம் பெரியவாளாக இருந்தால் உள்ளுக்கு காம இரசம் தெளிவுறுத்தும் கற்பனையின் கதைகளே மிக உண்டு. கட்டியணைத்தல் முத்த மிடல் முதலிய இன்பச் சுவை மூலம் தானே தம்பத்திரிகையை மக்கள் மாக்கள் மனம் மகிழ எழுதி வருகிருர்கள். பணமும் பெறுகிருர்கள். இப்படியான காதல் கதை எழுதும் பத்திரிகையின் முகப்புப் படத்தை காஞ்சிப் பெரியவாள் அலங்கரித்ததும் அன்றி ஆசியும் உவ்ளே வழங்கினுல் காதல் கதையால் மக்கள் மனதை அப்பத்திரிகைகள் பாழாக்கிப் பெறுகின்ற பழிக்கு தாமும் உடைந்தையாகி பழியில் துஞ்சுகின்ருர். இதற்காகத் தான் எமது முன்னைப் பெரியோர் தம்மை இந்த புகழ் பெறும் விடயத்தில் மிகு கவனமாக வைத்துக் கொண்டனர். இலை மறைகாய் போல தம்மை வைத்திருந்தனர். இதற்காகத்தான் இன்று பிரசங்கம் செய்வார் பொதுவாக எல்லாரும் புகழாலும் பணத்தாலும் தம் நெறிகெட்டு நிற்கின்ருர் என்று தீபம் அடிக்கடி உங்கட்கு வலியுறுத்தி வந்ததன் காரணம். யாழ்ப்பாண மக்களே இதை முதல் தெளியுங்கள்.

தன் நெறி கெட்டு நின்ருர் எந்தவகை இனிக்கப் பேசினுலும் உவக்கப் பேசினுலும் அதனுல் ஏதும் பிரயோசனம் உங்கட்கு வராது. பெரும் பாலும் நெறி கெட்டு நிற்கும் பாதகரின் பாட்டு உரிசைக்காக பேச்சு உரிசைக்காக போற்ற முயன்ருல் உடன் துயரம் உங்கட்கு தெரியா விட்டாலும் நீண்ட தொரு பழி வேலையில் உங்களைப் பின்னர் ஆழ்த்தும் என நீதி நூல்கள் கூறுவன.

மேடையில் ஓர் பாராட்டலைப் பெறும் போது அல்லது நெறியில்லாதாரைப் போற்றும் போது மிகவும் புளுகமாகத் தான் இருக்கும். ஆனுல் அந்த அழுக்கு சில நாட்கழிய பெரும் துயரத்தை உங்கட்கு தேடித்தரும். இதை பொருமையால் மொழிவேன் என எண்ணுதீர். அனுபவத்தால் உணர்ந்து நேரில் துன்பப் பட்டார் செயல்கள் கண்டு யானும் இதை உங்கள் நலன் கருதிச் சொல்லுகின்றேன். என் மீது நீங்கள் தவருன கருத்தைக் கொள்ளாதீர்.

யாழ்ப்பாணத்தவரான நாம் இரு முறை அடி வாங்கி ஒரு முறை கப்பலிலும் மற்ற முறை விமானத்திலும் கப்பலிலுமாக வீடு சேர்ந்தவர். எம்மவரில் பலர் தமது உயிரையும் தத்தமது இருப்பிடங்களில் நீககியவரும் யாழ்ப்பாணத்திலும் தமது உயிரைப் போக்கியவரும் உண்டு. இந்த ஒரு நிலையில் நம்மில் எத்தனை பேர் எங்கட்கு இப்படியான துயரம் வரக் காரணம் என்ன எனச் சிந்தித்தாரா? அல்லது இனி மேலாவது இப்படியான ஒரு நிலை நமக்கு மீளவும் ஏற்படக் கூடாது பாதுகாக்க என் செய்ய வேண்டும் எனச் சிந்திப்பாரா?

நமது நாட்டில் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடத்தி ஒன்பது உயிர்களைப் பலி கொடுத்தார். ஏன் அப்படி நிகழ்ந்தது. நிகழ்வதற்கு யார் காரணம். நம் செயலா பிறர் செயலா என நன்கு தெளிந்தனரா? இந்த வகையாக இந்தத் தீங்குகள் நிகழ்ந்தாலும் இன்னமும் நிகழ்த்த வேண்டி வந்தாலும் இவை எல்லாம் உடன் மறந்து திருவிழாக் கொண்டாடுவதிலும் ஊர்வலம் நடத்துவதிலும் எங்கள் மக்கள் தலைசிறந்தவர்கள் என்பது இருபதாம் நூற்றுண்டில் சரித்திர முக்கியத்துவமுடைய பண்பாக நம்மவர்களிடையே வந்து கொண்டது.

அடிவாங்கி அழுதாலும் அடுத்த கணம் அது மறந்து திருவிழா எடுப்பது கோலாகலமான பாட்டுக் கச்சேரி வைப்பது பிரசங்கம் வைப்பது பெரிய ஒரு காரியமாக இன்று நம்மிடையே வந்து கொண்டது.

இது மட்டன்று அடிவாங்கி அழுது கொண்டு வந்தும் இங்கு இருக்கும் நல்லவரை நன்மை சொல்லும் நறபண்பாளரை அடித்துக் கொல்லவோ சுட்டாதல் தொலைக்கவோ திரளும் திரட்சிகட்கும் குறைவே இல்லை. இது தான் நம்மவரின் நிலை. நாங்கள் அடிவாங்கிஞேம் அதன் காரணமாக அடுத்த முறை நம்மையே அனுப்புங்கள் என்று போட்டியிட மக்களும் முனைவதுண்டு.

இது இப்படியாக நம்மவரில் ஒரு சிலராதல் குறைந்தது நாலு பேராதல் நமது துயர நிலைக்கு நாமோ பிறரோ காரணம் என்பதை உணர்வாரா? ஒரு துன்பம் விளைந்தபோது ஒரு அறிவாளியின் கடமை அத்துன்பம் விளைவதற்குரிய காரணத்தை இட்டுச் சிந்தித்தல். உதாரணமாக எல்லார்க்கும் தெரிய வேண்டும் விளங்கவும் வேண்டும் இன்பத்தின் பின் துன்பம் உண்டு என்பதை. இந்த வகைத் துன்பம் நோயாகவும் பகையாகவும் வறுமையாகவும் வந்து கொள்ளும். அது உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடு இல்லாது வரும். அதற்காகத் தான் பெரியோர் எல்லாச் செயல்களிலும் சமபுத்தி செய்து நிற்பர். அத்தகை ஞானிகள் பெரியோர் பலர் இருந்த காலத்தில் தான் தமிழ் நாடு உலகையே ஆண்டது. இன்று தொட்டதிற்கும் வெருண்டடித்துத் துள்ளும் மக்கள் அடிவாங்கி அலுக்கின்றனர். இந்த வகையான கொள்கைகளையே உண்மை எனபதை நம் முன்ஞேர் சொல்லி வைத்து அதுவே மிக மேலான நெறி எனக் காட்டியும் போயினர் என்பது உணர்வாரா? நம்முன்ஞேர் இப்படியாக இலங்கையில் அடிவாங்கி வாழ்ந்தவரா? இல்லையே நன்கு மதிப்புடன் சிங்களச் சகோதரருடன் வாழ்ந்தவர். அதுமட்டன்று எத்தனையோ யாழ்ப்பாண மக்கள் சிங்களச் சகோதரரிடையே அவர்களது நன்மைகட்கு வழிகாட்டிகளாக வாழ்ந்த காலமும் உண்டு. இதை யாரும் மறுக்க முடியாது.

இந்த ஒரு பெரும் அவல நிலையை நாம் சிந்தித்தால் சிங்கள மக்கள் எம்மீது வெறுப்புக் கொள்ளும் படி வைத்தது நமது புண்ணியக் குறைவே. இந்தப் புண்ணியக் குறவை நாமே தேடிக்கொண்டோம். இதனை மீண்டும் பெறும் வழி தவமும் தருமமும் தான். ஆரவாரமும் ஆடம்பரமும் ஒருக்காலும் நன்நிலை தராது.

அடக்கம் அமரருள் உய்க்கும்
அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும்.

**நால்வர் காட்டிய அறவழி என்றும் நாட்டில்**
**வாழ்க நாடும் நல்வழி பெற்று சுதந்திரமடைக.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிபெருக்கி கிடைத்தால் ஊரையும் கலக்கி கோவிலையும் பழுதாக்கலாமா

## கோவில் கழுவாது போனாலும் ஒலிபெருக்கியை நீக்கல் புண்ணியம்

சுதந்திரம் என்று கூறி அல்லல் படுவீர். முதல் கோவிலைச் சுதந்திரமாக வைத்திருக்க முயலுங்கள்! அதை மிலேச்சரது பண்பாட்டிற்கு அடிமையாக்காதீர். கோவில் என்றால் அது வழிபாட்டிற்குரிய இடமா? அல்லது பிரசாரத்திற்குரிய இடமா? அல்லது வழிபாட்டிற்கும் பிரசாரம் இரண்டிற்கும் உரிய இடமா? இதை முதல் நாம் தெளியவேண்டும்.

எம்முன்னோர் கோவிலை ஏன் கட்டினார்? கட்டிய போது அவர்களுடைய உள்ளம் யாதாக இருந்தது. மக்கள் திரண்டு வந்து பிரசங்கம் கேட்டு பாட்டுக் கேடடுப் போக இதைப் பாவிக்கலாம் என்று இதைக் கட்டி வைத்தோம் என்று இன்றிருக்கும் கோவிலில் எந்த ஒரு கோவிலிலாதல் தாம் உயில் எழுதி உள்ளாரா?

கோவிலில் நித்திய பூசை நடவாட்டிலும் பரவாயில்லை நீங்கள் ஒரு திருவிழா உச்சப் பிடியிலை செய்து ஊர்மக்கள் அன்று கோவிலை எட்டிப் பார்க்க வழி செய்தால் போதும் என்றும் வழி வகுத்துள்ளனரா?

உண்மையாம்படி கேட்கின்றேன் இன்றுள்ள மக்களில் எத்தனை பேருக்கு கோவில் என்றால் என்ன அங்கு ஆர் இருக்கிறார் அங்கு எப்படி நடக்க வேண்டும் என்பதை உணர்வார்களா?

இவற்றை எல்லாம் நன்கு தெளியாதபடியே இன்று கோவிலில் கருமங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு கோவிலும் கடவுளது இருப்பிடம் என்பதை நாம் உணர வேண்டும். இந்த உணர்ச்சியை நமக்குத் தந்து போயிருக்கின்றார்கள் நமது நாயன்மார்கள்.

ஒவ்வொரு கோவிலுக்கும் எம் நாயன்மார் சென்ற போது எப்படி ஒழுகினார் என்றதைப் பெரிய புராணம் தெளிவுறக் காட்டுகின்றது. கோவிலில் அவர் வழிபட்ட முறைகளையும் கோயில் முன்பு பணிதலையும் உட்செல்லலையும் வலம் வருதலையும் இறைவன் அருட்கோலம் கண்டு உருகிப் பாடுதலையும் நன்கு தெளிவுறக் காட்டுகின்றது. இந்த ஒரு நிலையை நாம் உணர்ந்து கொண்டால் பின்னர் எவ்வளவு புனிதமுடனும் பயபக்தி உடனும் நமது கோவிலில் நாம் நடத்தல் வேண்டும் என்பது தெளிவாகும்.

உலகைப் படைத்த கடவுள் இந்த உலகைப் படைத்து இங்குள்ள ஜீவன்கள் வழிபட்டுய்ய சிவதருமம் உரைத்தான். இதனைச் ''சிவதன்மம் உரைத்த பெருமான்'' என்று நாயன்மார் மொழிந்துள்ளனர். ஆதலினால் ஒவ்வொரு ஆலயத்தும் அவன் இருப்பதாயின் அவன் சொல்லிய தருமப்படி (ஆகமப்படி) அக் கோவில் அமைய வேண்டும். ஆதலினாலே எந்த ஒரு கோவிலுக்கும் முதலாளி பெரிதல்ல குருக்கள் பெரிதல்ல யாரும் பெரிதல்ல. இறைவனால் உரைத் தருளப் பெற்ற சிவதன்ம ஒழுங்கு தான் பெரிது. இந்தச் சிவதன்மத்திற்கு எல்லாரும் கட்டுப் படல் வேண்டும். அந்த விதிமுறைகளை எல்லாரும் நாம் உணர வேண்டும். இல்லத்துப் பாடசாலையிடத்துச் சில இச்சைகளுக்காக நாம் எப்படியும் நடக்கலாம். ஆனால் கோவிலினில் அப்படிச் செய்ய முடியாது. அங்கு உமது இச்சைகட்கு இடமில்லை. உமது இச்சைகள் கட்டுப் படுத்த வேண்டியுள்ளது. இந்த இச்சைகளைக் கட்டுப் படுத்தல் தான் ஆசாரம் எனப்படுவது.

நான் நேற்று சாயந்தரம் யாழ்ப்பாணத்திலிருந்து என் வீடு நோக்கி வரும் பொழுது கொக்குவில் மஞ்சவனப் பதி முருகன் ஆலயத்தின் முன்பாக வருகின்ற நேரம் தெரு வீதியில் லயிட் தம்பங்களில் கட்டியிருந்த ஒலி பெருக்கி குளாய்கள் பாடிக் கொண்டிருந்த சமயம் பாடல் நிறுத்தப்பட்டது. நான் யோசித்தேன் பூசைக்காக நிறுத்தி யிருப்பாரோ என நினைந்தேன். இல்லை உடன் மைக் ரெஸ்ரிங், வண் ரூ தீறீ இப்படி பல முறை பிறகு உபூ உபூ இதன் பின் சிக்கு சிக்கு சிகுகு சிககு என்று தாளத்திற்கமைய குளாய் சொன்னது. ஓகோ வாரியார் துவங்கப் போறார் அதற்கு முன்பு ரெஸ்ரிங் தனது வாரலைத் தொடங்கி பின்னர் வாரியாருக்கு பதமாக வைக்க நடவடிக்கை எடுக்கின்றார்கள் என நினைந்தேன். ரெஸ்ரிங் நடைபெற்றதும் சூலமங்கலம் சகோதரிகள் சீர்காழி கோவிந்த ராஜன் பாடல்கள் தொடர்ந்தன. நல்ல தொனி நல்ல இசை நமது காதும் கொஞ்சம் அதில் இழுபட்டது. ஆனால் அங்கு தம்ப பூசையும் உள்ளே நடைபெறுவதாக மேளத் தொனி கேட்கப்பட்டது. இதுமட்டல்ல காலையில் நடைபெறும் பூசையில் மணி ஓசையுடன் பூசை நடந்தாலும் ஒலி பெருக்கியும் தனது ரேப்பாடலை பிரசங்கத்தை வாரி வழங்கிக் கொண்டிருந்தது. பூசை என்று கூட ஒரு சிறு மதிப்பாதல் செய்யப் படவில்லை. ஏதோ கொடிமரப் பூசை என்று சொல்லுவார்கள் அதுவும் பிரசங்கத்திற்காக அவதி அவதியாக சில கோயிலில் நடைபெறுவது. தம்ப பூசை என்று சொல்வார்கள். அது விரதகாரர் தான் தரிசிக்க வேண்டும். மற்றவர்க்கு அது தேள்வையில்லைப் போலும். மற்றவர்க்கு சீர்காழியினது ஒரு பிடி சூலமங்கலத்தின் துடுக்கு கே பி சுந்தராம் பாளது சுருள்ப் பிடியின் அசை வாரியாரது வாரும் மொழிகளில் பல எல்லாம் நன்றாகவே ஒலி பெருக்கி குளாய் மூலம் தரப்படுவன. ஐயோ அது ஒரு குளாய் மூலம் அல்ல எட்டுக் குளாய் மூலமே அந்த ஒரு வீதியில் கதறல். இந்த வகை விஞ்ஞானக் கருவிகள் தொழில் பட; நான் நினைத்தேன் மஞ்சவனப்பதி முருகன் வாரியாரிடமும் குளாய்களிடமும் இயக்குனர் இடமும் தனது கோவிலைக் குத்தகை கொடுத்திட்டு ஆறுதலுக்காக வேறு எங்காதல் போயிருப்பாரோ? என்று

ஏன் என்றால் வாரியாரது பிரசங்கம் கேட்க இவ்வளவு மாக்கள் கூட்டம் ஆண் பெண் குழந்தை குஞ்சு எல்லாம் ஓடி வருகுது; மற்றது வாரியாரைத் தரிசிக்க குடும்பசமேதராக மிக உயர்ந்த விலையுடைய காரில் எத்தனையோ முதலாளி மார்கள் பால் போல் வெள்ளை ஆடையுடனும் பலதரப்பட்ட நிறம் உடையபட்டுப் புடவை ஓம் முருகாச் சால்வை வேட்டி உத்தரியங்கள் எல்லாவற்றுடன் முன்னிருந்து கரம் கூப்பி கும்பிட வாரியாரும் தனது பிரசங்கத்துடன் சேர இந்த முதலாளிப் பிரபுக்களை ஒரு தட்டு தட்டி விட; அப்பாடா ஒரே எழுப்பம். அதோடு அவரது வாரல் மொழிகளை கே கே எஸ் வீதியிலே எட்டுக் குளாய் ஓலமிட்டுச் சொன்னால் பிறகு ஏன் பேசுவான் ஈடு இணையே இல்லை. இது மட்டன்றி வாரியாரது பிரசங்கமும் மகாவலி கங்கை பெருகினால் எல்லாவற்றையும் வாரிக் கொண்டு ஓடுவது போல் கேட்போர் உள்ளங்களை வாரிக் கொண்டு அவரும் மகிழ்வால் தம்மிடத்து உள்ளதில் தாராளமாக வாரி வழங்கிட மொழியும் பணமும் பண்டமாற்றாக இங்காலிக் குறையை அது நிரப்பி அங்காலிக் குறையை இது நிரப்பி ஒரே இடத்தில் சமரசம் விளங்கும். எல்லாம் சிறந்தே விளங்கிட கந்தசாமியார் பார்த்து இவரிட்டை இவ்வளவு ஆள் வந்தால் என்னட்டை எத்தினை பேர் வந்தவர் என்று எண்ணி வெளிக்கிடுவாரோ என்ற சந்தேகம் தான் பெருகிக் கொண்டது. கோவில் கட்டினது கந்தசுவாமியாருக்கு ஆனால் ஆட்கள் வாறது வாரியார் அவர்களின் பிரசங்கத்திற்கு என்றால் முருகனுக்கு வெட்கம் வராமல் என்ன செய்யும்?

இதற்காகத் தான் கோவிலில் செல்லும் போது பயபக்தியுடன் செல்லுங்கள் வெறுங் கையுடன் செல்லாதீர் தேங்காய் பழம் மலர்கள் கொண்டு செல்லுங்கள். அங்கு போனால் ஒழுக்கமுடன் அடக்கமுடன் நடவுங்கள் கரவு வஞ்சனை வையாதீர் வீண்வார்த்தை பேசாதீர் என்றெல்லாம் நம்முன்னோர் சொல்லி வைத்தமைக்குக் காரணங்களாவன. இவை இப்படியிருப்ப இன்று கோவிலில் நடைபெறுவதைப் பார்த்தால் அங்கு கடவுள் இருப்பாரோ அல்லது அது கடவுளுடைய இருப்பிடம் என்று மக்கள் கருதுகின்றனரோ என்ற சந்தேகமே எழுகின்றது. ஒரு புறம் ஒலிபெருக்கியின் அலறல்; ஊரிலிருக்க முடியாதபடி ஓலமிடுவாரது சத்தம் குழாய்கள்மூலம் கேட்கும். இவையன்றி சினிமா நடிகரின் பாடல் அடுக்குமொழிகள் சீக்காய் விசிலடி கைதட்டல் கூச்சலிடுதல் கடலை சிகரெட் வெற்றிலை புகையிலை சுருட்டு ஐஸ்கிறீம்உண்ணல் முதலிய செயல்கள் மிகுவன. கும்பிடப் போவார் சேய்யும் செயல்கள் என்று சொல்லவில்லை. ஆனால் பிரசங்கம் கேட்க பாட்டுக் கச்சேரி கேட்க வேடிக்கை பார்க்க செல்லும் மாக்கள் கூட்டமே இந்தப் பாதகச் செயலைக் கூசாது செய்கின்றது. இத்தகைய பாதகத்தை மக்கள் கோவிலில் செய்திட இதற்குக் காரணமானவர் யாரெனப் பார்க்கப் போனால் எங்களுடைய திருவிழாவுக்குப் பெருந்திரளாள மக்கள் வரவேண்டும் என மதிப்பைப் பெறவிரும்பிய திருவிழாக்காறரும் எது போனாலும் நமது காசும் புகழும் பழுதுறுதிருந்தால் சரி என நினைக்கின்ற பல பேச்சாளரும் பிரசங்கிகளும் பாட்டுக்காரருமே ஆவர். எந்த ஒரு அறிவாளியும் கோவிலில் இத்தகைய பாதகச் செயலுக்கோ அல்லது பிறர் செய்வதற்கு தான் உடந்தைஆக இருப்பதற்கோ விரும்பார்.

இதற்குச் சான்றாக ஆனைக்கோட்டை மேற்கிலுள்ள ஓர் பிள்ளையார் கோவிலில் தம்ப பூசை செய்வதற்கு இடைஞ்சலாக அக்கோவிலில் ஒலி பெருக்கி பாடிக்கொண்டுருந்தமையால் அதை நிறுத்தினால் ஒழிய நான் பூசை செய்ய மாட்டேன் என மறுத்ததும் பின்னர் ஒலிபெருக்கி நிறுத்திய பின் பூசை செய்த வரலாறும் உண்டு. இந்தத் துணிவு எத்தனை பிரசங்கிகட்கு இன்று உண்டு தமது காசு போனாலும் புகழ் போனாலும் கோவிலில் நிகழப்பட வேண்டிய அருள்நெறி பங்கப் படக் கூடாதென முயல்கின்ற பேச்சாளரோ பாட்டுக்காரரோ யாரேனும் ஒருவரைக் காண்பிக்கலாமா? இத்தகையோர்க்கு தண்டனை வரும் என்று வேதங்கள் சொல்கின்றன. ஆகவே கோயிலில் தீயபழக்கங்களுக்கு உடந்தையாய் இருந்து கொண்டு நன்மையை வளர்ப்பது எப்படி என்பது தான் கேள்வி,

இனிமேல் கோவில் அர்ச்சனைகள் திருமணவைபவங்கள் செபம் முதலிய யாவும் ஒலிப்பதிவு நாடாவால் தொழில்படும் நிலை வந்து கொண்டது. பூசனைக்கு ஓர் ஐயர் வேண்டாதபடி ஒலிப்பதிவு நாடாக்கள் மூலம் எதுவும் செய்யலாம் என்ற செயல் வந்து கொண்டது. இந்த ஒலிபெருக்கியை இதன் தீங்கினை உணரவேண்டிய அந்தணர் குலமே விரும்புகின்றது. மற்றைய மக்களைப் பற்றி நாம் என்ன சொல்லலாம். கச்சியப்பர் கந்தபுராணத்து இத்தகைய இயந்திர சாதனங்கள் அசுரர்க்கே உரித்தாவது என்கின்றார். தேவர்கள் இதனை விரும்பார்கள். தேவர்கள் அடக்கம் பக்திமை சாந்தம் அமைதி இவற்றை விரும்புவார் என்கின்றார். அசுரர் தான் ஆரவர்ரம் அட்டகாசம் கொடுமை பிறர்க்கு இன்னல் விளைவிக்கக் கூசாமை முதலிய கொடும் செயல்கள் நிரம்பப் பெற்றவராக உள்ளார் என்கின்றார். இத்தகையதாக ஒலிபெருக்கியை கோவிலில் பாவிக்கும் அந்தணரின் செயலை நடத்தையை உற்று நோக்கும் போது அசுரர் குலத்தை இவரும் சேர்ந்தவரோ என ஐயப்பட வேண்டி இருக்கிறது. வேதநெறியை நன்கு கற்றுத் தெளிந்த அந்தணர்கள் ஒலிபெருக்குப் பாவனையை அருவருக்கவே செய்வர்.

ஒலிபெருக்கி ஒலிப்பதிவு நாடாக்கள் யாவும் கலியின் விருத்தாந்தமே: இவை மனிதன் யந்திரங்களை உண்டாக்கிய வியப்பைத் தருவன. ஆகவே இவை ஒருக்காலும் வழிபாட்டிற்கு உகந்தன அல்ல கலியால் பீடித்த இந்த உலகில் கலியின் துயரம் நீங்க அருள் தரவல்ல கந்தனுடைய ஆலயங்களே இந்த ஒலிபெருக்சிக்கு மிகு முக்கியம் கொடுக்கின்றன என்றால் இனிப் பிற என் சொல்வோம். சில கோயில்களில் ஒலிபெருக்கியே முக்கிய அம்சம் வகிப்பதைப் பார்க்க வேதனையாக இருக்கிறது.

# குருதேவனிடம் யோகசுவாமி பெற்ற உபதேசம்

நவாலியூர் சிந்தாமணி விநாயகப் பெருமான் ஆலயத்து அர்ச்சகர் குடும்பத்தில் நரைத்த மூப்புடைய பெருமாட்டி இருந்தவர். அவர் ஒரு நாள் என்னை நோக்கி உமது யோகர் சுவாமிகளின் குரு யார் தெரியுமோ எனக் கேட்டனர்.

நான் சொன்னேன் அம்மா தெரியாது நீங்கள் சொல்லுங்கள் என்றேன். அப்போது அவர் என்னை நோக்கி தம்பி கேளும் யோகர் சுவாமிகளுடைய குரு செல்லப்பாசுவாமிகள் எனப்பட்டவர். அவர் நல்லூர் தேரடியில் இருந்தவர் என்றார் அப்போது அவருடைய மகன் கூட இருந்தவர் என்னை நோக்கி எனக்கும் சிறுபிள்ளையாய் இருந்த போது தெரியும் அவரை விசரன் என்று எல்லாரும் சொல்லுவார்கள். நாங்கள் அவரைக் கண்டால் பயந்து ஓடுவோம். ஆனால் எங்களைக் கண்டால் கலைத்து வந்து பிடித்துக் கொண்டு போய் தேர்முட்டியடியில் இருத்தி கங்கையைச் சடையில் வைத்தார் என்ற தேவாரம் சொல்லித் தாறவர் அது சொல்லிச் சொல்லி அலுத்துப்போம் எங்கட்கு என்றார் மகனார்.

ம ப பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அந்தணர் குடும்பம் நல்லூரில் இருந்து தான் நவாலிக்கு வந்தது. பின்னர் அந்த அம்மையாரை நான் கேட்டேன் இந்த செல்லப்பா சுவாமிகளின் வரலாறு உங்கட்குத் தெரியுமோ என்று. அப்பேபது மூதாட்டியார் என்னைப் பார்த்து இவர் எங்களது அருகாமையில் உள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர்களில் ஏழெட்டுப்பேர் சகோதரங்கள். பெரும்பாலும் பெண்கள் சின்னத்தங்கம் என்ற ஓர் சகோதரி அப்பம் சுட்டு வித்தவ எனக்குத் தெரியும். செல்லப்பாசுவாமிகளை நாயன்மார்கட்டு மணியகாறன் செம்மணி உப்பளத்திலை இவருக்கு ஒரு காவல் வேலை எடுத்துக் கொடுத்தவர். அங்கு 3ஓ 4ஓ நாள் வேலைசெய்விட்டு ஒருநாள் நடுச்சாமத்தில் நல்லூரில் வெளிச்சம் தெரியுது நான் போறேன் என்று கூறி அங்கிருந்து நேரே வந்து நல்லூர்தேரயில் சேர்ந்தவர். மறுநாள் இவருடைய ஆட்கள் இவரை அழைத்துதுப் பார்த்தும் போகவில்லை. சுற்றத்தவர் கிட்டப்போனால் ஒரே ஏச்சாகவே இருக்கும். மணியகாரன் கேள்விப்பட்டு வந்து கூட்டிக்கொண்டு போய் மறுபடி உப்பளத்தில் வேலைக்கு விட அவர் போனகையுடன் இவர் ஓடிவந்திட்டார்.

அப்பாடா ஒருத்தரும் இவருக்குக் கிட்டப் போகமுடியாது. சகோதரி கின்னத்தங்கம் அப்பம் சுட்டுக்கொண்டு போய் வாங்கின ஏச்சுக்கு கணக்கே இல்லை. தாயைப் பேசினதற்காக மகன் சபாரத்தினம் செல்லப்பருக்குப் அடிக்கப் பொல்லுத்துக்கிக் கொண்டு போனவர். அடிப்பியோடா என்று கேட்க சபாரத்தினத்திற்கு வேர்த்ததாம். பொல்லை கீழே போட்டுப் போயினர் சபாரத்தினம் என்றார்.

இப்படியாகச் செல்லப்பாசுவாமிகள் தேரடியில் இருக்குங் காலத்தில் யோகர்சுவாமி அவரிடம் வாறவர் எனக் கூறினர் அந்த வயதாலும் அறிவாலும் மூத்த அந்தணர் பெருமாட்டி.

அவ்வாறு குருவிடம் சென்ற யோகசுவாமிகள் நல்லூரில் வீற்றிருக்கும் பரம்பொருளின் அருள் ஒளியாக தேரடியில் வீற்றிருந்த செல்லப்பா சுவாமிகளைச் சரணடைந்து; அவர் மூலம் பிறவாத இறவாத பேரின்ப நிலைபெற்று உய்ந்தபொழுது அக்கரலத்தில் குருதேவன் அவர்க்கு நிகழ்த்திய அருளுரையைக் கீழே காண்கின்றீர்கள்.

"என் மகனே! ஒரு பொல்லாப்பும் இல்லை. நீ ஒன்றுக்கும் அஞ்சாதே. நான் சொல்வனவற்றைக் கவனமாய்க் கேள் கேட்டுச் சிந்தி. சிந்தித்துத் தெளி, தெளிந்து நிஷ்டை கூடு. நிஷ்டையுங் கைவரப் பெற்றால் அந்தமிலா ஆனந்தத்தை நீ காண்பாய். அந்த ஆனந்தமானது உன்னறிவைக் கொள்ளை கொண்டு உன்னையும் விழுங்கி நிற்கும். அறிவின் அதீதமாகிய துரியாதீத நிலையை நீ அடைந்தவனாவாய். முக்தனாவாய் அழியாப்பதம் பெற்றவனாவாய். பிறப்புக்கும் இறப்புக்கும் காரணமாகிய அஞ்ஞானம் அகலும். பிறவித்துயரம எல்லாம் நீங்கும். உள்ளங் குளிரும். சாந்தம் நிறையும். மனிதப் பிறவியை எடுத்ததினால் அடையற்பாலன யாவும் அடைந்தவனாவாய். செயற்பாலன யாவும் செய்தவனாவாய். ஆதலால் மகனே! நீ ஒன்றுக்கும் பயப்படாதே. ஒரு பொல்லாப்புமில்லை. உன்னை பீடித்திருக்குங் கவலைகளெல்லாம் இன்றோடே நீங்கக் கடவன. சிற்சுகத்தைப் பெறக்கடவை.''

''இரகசியங்களெவற்றிலும் தலை சிறந்த பரமரகசியத்தையே நான் உனக்குப் போதிக்கின்றேன். 'உலகமெல்லாம் இறைவன் சந்நிதானம்'' என்பதை எப்போதும் ஞாபகத்தில் வைத்துக் கொள். 'உலகமெல்லாம் இறைவன் சந்நிதானம், உலகமெல்லாம் இறைவன் சந்நிதானம், என்று அடிக்கடி சொல்லிக்கொள். பார்பதம், அண்டம் அனைத்துமாய் முளைத்து எல்லா உயிர்கட்கும் உயிராய், உடனிருந்தறிந்து, பிறிவற நின்று இயக்கஞ் செய்யுஞ் சிற்சோதியாகும் எம் இறை உன்னை விட்டு அவர் ஒருபோதும் பிரிந்திருந்ததில்லை. இனிமேல் பிரிந்திருக்கப் போவதுமில்லை. உன்னுடைய வாழ்விலும் தாழ்விலும். இன்பிலும் துன்பிலும், இறப்பினும் பிறப்புனும் உன்னுடன் கூடவே யிருந்தனர். இறைவன் உன்னைவிட்டுப் பிரியாதவனா யிருக்கும் போது உனக்கு என்ன பொல்லாப்பு நிகழக்கூடும்?,,

''உன்னை பீடித்த அஞ்ஞானத்தை நீக்கி, உன்னை நல்நிலைப்படுத்த வேண்டும் என்னும் பெருங்கருணையினால், உன்னை எண்ணரிய பிறவிகளுல் பிறக்கச்செய்து அவ்வப் பிறவிகட்குரிய நநு, கரண, புவன, போகங்களை யெல்லாம் தந்து, அறிவை வளர்த்து, உன் பக்குவங்கண்டு குருவாகி வந்து. உன்னுடையவை என்று நீ நினைத்திருந்த உடல் பொருள் ஆவி மூன்றையும் தன்னுடையவை ஆக்கி, உன்னையும் தானாக்கி ஆண்டருள்வன். ஆதலால் முடிவில் நின்று பார்க்கும்போது, நீ பிறவிகள் தோறும் செய்த பாவங்களும் புண்ணியங்களும் உன் வளர்ச்கிக்கு இன்றியமையாதனவாய் இருந்திருக்கின்றன. தீயொழுக்கங்களை நீக்கி, நல்லொழுக்கங்களை கடைப்பிடித்தனை. உனக்கு நன்மைகள் விளைந்தன. நல்லறிவி வளர்ந்தது. கடவுள் வழிபாட்டை கைகொண்டனை. சித்தசுத்தி அடைந்தாய். பரி பக்குவகாலம் வந்துவிட்டது. சற்குருவைத் தேடிச் சார்ந்தாய். இனிப் பிறவாய். ஆதலால், என் மகனே ஒரு பொல்லாப்பும் இல்லை.''

''உலகம் எல்லாம் இலறவன் சந்நிதி என்று சதா தியானஞ் செய்''

''என் மகனே! சச்சிதானந்தசொரூபியாகிய எம்மிறை பண்டும் இன்றும் என்றும் உன்ளை விட்டுப் பிரியாதனவாய் உன்னுடனிருந்து, உன் உயிர்க்கு உயிராய், உன் அறிவினுக்கு அறிவாய் உனக்குச் சதா ஆனந்தத்தை ஊட்டிக்கொண்டிருப்பவனாய் விளங்குகின்றான், ஆதலால் உனக்கும் இறைவனுக்கும் உள்ள சம்பந்தம் இனிமேல் புதிதாக உண்டாவதன்று. எப்பவோ முடிந்த காரியம்.''

''இந்தப்பெரிய உண்மையை நீ என்று உன் அனுபவத்திற் பூரணமாய் காண்கின்றனையோ, அன்றே நிரதிசய இன்பமாகிய வீடுபேற்றை அடைந்தவனாய்''

''ஆதலால், இறைவன் என்று உன்னை ஆட்கொள்வான் எனக் கவலைப்படாதே. அவனது அருளும் அன்பும் என்றும் உன்னுடையவைகளே. அவனது அருள் வந்துணர்த்த நீ உணர்வை''.

''உனக்கும் இறைவனுக்கும் உள்ள நெருங்கிய சம்பந்தத்தை இமைப்பொழுதும் மறவாது நினைந்துகொண்டிருக்க நீ பழகவேண்டும். அதுவே நீ செய்ய வேண்டிய வேலை. அந்தச் சம்பந்தத்தை உணருந்தோறும், உன் அகத்தே தோன்றும் பேரானந்தத்தில் மூழ்கிப் பிரபஞ்சச் சேற்றை கழுவி விடு. பேரின்ப வசப்பட்டிருக்கும் மனம் உலகப் பொருள்களைப் பற்றுவதனால் உண்டாகும் சிற்றின்பத்தை நடாாது.''

''ஆதலால் என் அருமை மகனே! நீ வீட்டின்பம் எய்துவதற்கு ஒரே ஒரு வழியுண்டு. மெய்ப் பொருள் எது என்றும், பொய்ப் பொருள் எது என்றும் தீர்க்கமாய் விசாரித்து மெய்ப் பொருளுக்கும் உனக்கும் உள்ள நெருங்கிய சம்பந்தத்தை உணர்ந்து, அம் மெய்ப்பொருளை இறுகப் பற்றி அதனிடமே உன்னை முழுதும் ஒப்புவித்து, உன் செயல் யாவும் அற்று, அவன் செயலாகி அவனே தானாய் நீக்கமின்றி நிற்பாயாக.''

''மறுபடியும் நான் உனக்கு வற்புறுத்திக் கூற விரும்புவதென்னவெனில், இறைவன் திருவருள் என்றும் உன்னுடன் கூடவிருக்கின்றது. 'அருள் பெறு நாள் என்று'? என இரங்காதே. எப்பவோ முடிந்த காரியம். நீ அந்த அருளை மறவாதிரு. அதுவே நீ செய்யவேண்டிய வேலை.''

''என் அருமை மகனே! எண்ணரிய பிறவிகளில் நீ மனிதனாகப் பிறந்து இன்ப, துன்பங்களை அனுபவித்து, அவற்றின் நிலையாமையை உணர்ந்து நிலையாய இன்பத்தை நாடிப் பெரிதும் உழைத்து வந்திருக்கின்றாய். வேண்டுவோர் வேண்டுவதை ஈயுங் கருணாநிதியாகிய எம் அப்பன உன் கருத்து முற்றும் வண்ணம் இந்தப் பிறவியை உனக்கு ஈந்தான்.

''வீட்டின்பத்தை பல சென்மங்களிலும் தொடர்ந்துவந்த காரணத்தால் இப் பிறவிக்கண்ணே உலகப் பொருள்களின் மீது செல்லாத தூய்மை நிறைந்த மனத்தை உடையவனாய் விளங்குகின்றாய். ஈஸ்வரனை இடையறுது சிந்திததால் உனக்கு எளிதில் கைகூடும்.

உலகமெல்லாம் இறைவன் சந்நிதானம் என்று சதா சிந்திப்பதற்கு நீயே தகுந்தவன். உன் தகுதியை அறிந்தே இம் மகா மந்திரத்தை நான உனக்கு உபதேசித்தேன். இளமைப் பராயந் தொட்டு உலகின் கண்ணுள்ள தீமைகளைக் கண்டு நடுங்கினை. அந்த நடுக்கத்தை நீககுவதற்காகவே ஒரு பொல்லாப்புமில்லை என்னும் மகா வாக்கியத்தை உனக்குப் போதித்தேன். அதன் பின்னர் இறைவன் திருவருளைப் பெறும் நாள் என்று எனக் கவலைப்பட்டனை. அக்கவலையை நீக்குவதற்காகவே எப்பவோ முடிந்த காரியம் என்னும் மகா வாக்கியம் எழுந்தது.

''இப்பொழுது இறைவனை அறியவேண்டும் என்னும் கவலையானது இரவும் பகலும் உன்னை வருத்துகின்றது. ஏனைய பொருள்களைச் சுட்டி அறிதல் கூடாது. அறிவுக்கு அறிவாய் விளங்கும் இறைவனை நீ சுட்டி அறிதல் எப்படி? இறைவனை அறிய வேண்டும் என்னும் எண்ணம் உன்னைச் சுட்டற்ற பூரணத்தை அடையவிடாது தடுக்கின்றது. ''நாம் அறியோம்'' என்னும் மந்திரத்தைச் செபித்து அத்தடையை வெட்டிவிடு.

இறைவனை அறியவேண்டும் என முயலாதே. அகண்ட பரிபூரண சச்சிதானந்த சொரூபியாகிய எம இறைவனுக்கு உன் அறிவை நைவேத்தியமாகக் கொடுத்துவிட்டுச் செயலறறு நில். அவன் உன் அறிவை முழுதும் உண்டு உன்னையுந் தானாக்கி நிற்பன்.

ஆதலால் என் கண்மணியே! நீ உலகம் எல்லாம் இறைவன் சந்நிதானம் உலகம் எல்லாம் இறைவன் சந்நிதானம் என்று இடையறுது தியானஞ்செய். இறைவனை அறிய முயலாது நாம் அறியோம் என்று அடங்கிச் சும்மா இரு. மகா மௌனம் உன்னை விழுங்கும் அதுவே வீடு.

இவ்வாறு கூறி முடிந்ததும், குருவும் சீடனும் பேரானந்தத்தில் மூழ்கி மௌனமாயிருந்தனர்.

எல்லையில்லாத பேரின்பத்தில் மூழ்கி அப்பேரின்பத்தினல் விழுங்கப் பட்டவனாய்த், தற்போத சூனியனாய நான்தான் அற்ற இன்ப நிஷ்டையில் பேச்சு மூச்சு அற்று நெடு நேரம் நிலைத்திருந்த சீடன் விழித்து குருநாதனை வணங்கினன். இம்மையிலேயே தனக்குச் சிவபதம் அளித்த அவரது திருவருளை வியநது பாராட்டினன். பாராட்டி அவரது திருவுள்ளக் குறிப்பை எதிர்பார்த்திருந்தான். குருதேவன் சொன்னர்''என் மகனே! பல ஜென்மங்களிலும அனுட்டித்து வந்த தவப் பயனை நீ இன்றே பெற்றனை. சச்சிதானந்த சொரூபியாகிய எம் இறைவனோடு இரண்டறக் கலந்து வீடு பேற்றைப் பெற்றனை. இனி நீ இறவாய்; பிறவாய் சிவ சொரூபத்தோடு இரண்டறக் கலநததினல் சிவானுபூதிச் செல்வன் ஆனாய். அந்த அனுபூதியில் சச்சிதானந்த சோதி ஆகண்ட வடிவாய் ஓங்கி நிறைந்திருந்தது. ஆங்கே நீயும் இல்லை; உலகமும் இல்லை. அவ்வனுபூதியினின்றும் விலகி வெளிமுகப்பட்ட போது மறுபடியும் நீயும உலகமும் முளைக்கும். ஆயினும் நீ உன் அனுபூதியில் உலகமும நீயும் இறைவனில் ஒடுங்குவதையும் திரும்ப அவனிடம இருந்து விரிவதையுங் கண்டிருக்கின்றாய். ஆதலால் அவ்வனுபூதியைக் கொண்டு சிவத்தை அன்றி நீயும் உலகமும இல்லையென்றும், சிவ சொரூபமே இவை எல்லாம் என்றும் அறிந்து எங்குஞ் சிவத்தையே காண். நிலமும் அவனே! நீரும் அவனே! நெருப்பும் அவனே! காற்றும் அவனே! ஆகாசமும் அவனே! சூரியனும் அவனே! சந்திரனும் அவனே! உயிரும் அவனே! ஊனும் அவனே! உயிரும் அவனே! உணர்வும் அவனே! நன்மையும் அவனே! தீமையும் அவனே! இருளும் அவனே! ஒளியும் அவனே பந்தமும் அவனே வீடும் அவனே எல்லாம் அவனே ஆதலின் முழுதும் உண்மை என்று அறி.

''என்மகனே! நான் உனக்கு கூறவேண்டியவை இன்னுஞ் சிலவுண்டு. இதுகாறும் நீ தொடர்ந்து வந்த சைவசித்தாந்த நெறியையே உனக்குப் போதித்தேன். அவ்வழி சென்று வீட்டின்பத்தைப் பெற்று விட்டனை. இனி உனக்கு வேதாந்த சித்தாந்த சமரச நிலையை உணர்த்த விரும்புகின்றேன்.

சீவ போதம் நீ என்றும், அவ்வறிவுக்கு அறிவு செய்பவன் சச்சிதானந்த சொரூபியாகிய சிவம் என்றும், அந்தச் சிவ சொரூபத்தைச் சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தனாதீதத்தை அடைந்து சீவபோத மற்றுச் சிவமாதலே முத்தி என்றும் கூறும் சைவசித்தாந்தம். வேதாந்தமோ என்னில் சீவபோதம் நீ அன்றெனத் தள்ளிச், சீவ போத சாட்சி நீ என்றும் அச்சீவ சாட்சியே சச்சிதானந்த பிரமம் என்றும், அப்பிரமமே நீ என்றும் அறிந்து நின் நிசசொரூபமாகிய பிரமசொரூபமாயிருத்தலே முத்தி என்றும் கூறும்.

''சீவபோத ஒழிவிலேயே இன்பம் உதிப்பதென்பதும், இன்பாதீதமே முத்தி என்பதும், இரு சாராருக்கும் ஒத்த முடிபு. வேதாந்த சித்தாந்த சமரசம் இதுவேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபத்திற்கு வாழ்த்துக்களும் கருத்துக்களும்

உ

சந்திரதீப ஆசிரியர் அவர்களே!

ஐயா,

தங்கள் வெளியீடு சுடர் 16 கிடைக்கப் பெற்றேன் மிக்க நன்றி. அது நல்வேளையிலும் நல்லோர் மத்தியிலும் கிடைத்து வருகின்றது. அதன் பலனாக நல்ல வரவேற்பையும், கருத்துப் பரிமாறலுக்கேற்ற சந்தர்ப்பத்தையும் கொடுத்து, உள்ளுணர்வை யும் ஊக்கிவருகிறதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

தாங்கள் செய்து வரும் பணி, சிவப்பணி, அரும்பணி, பெரும் பணி, பெரிதும் பராட்டுக்குரியபணி. ஏன்? வேண்டிய நேரத் தில் வேண்டிய முறைப்படி வெளியாகும்பணி. உள்ளதை உள் ளவாறு எடுத்துரைக்கும் பணி.

இப் பணியாற்றும்போது ஏற்படும் பலதிறப்பட்ட எதிர்ப்புக் கள், மனக்குமுறல்கள், பூசல்கள், புகைச்சல்கள் இன்னோரன்ன வற்றையெல்லாம் தாண்டிச் செயலாற்றுந் திறன் போற்றுதற்குரி யது. இவ்வேளையில் அப்பர் சுவாமிகளின் மனவைராக்கிய நிலை நினைவுக்கு வருகிறது. ''மண்பாதலம்புக்கு மால்கடல் மூடி மற்றே ழுலகும் விண்பால் திசை கெட்டிரு சுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே'' என்பது திருவருட்துணை கொண்டு செயலாற்றும் போது கலங்க வேண்டியதில்லை. சுடச் சுடரும் பொன்.

உயிர்களின் துன்பம் கண்டு துடிப்பது. துன்பம் நீங்கி இன் பம் காண விளைவது. அறநெறியின் சிதைவு கண்டு வருந்துவது நன்னெறியின்பாற் செலுத்த முயல்வது, வல்லார் வகுத்த வழி முறைகளைக் கூறுவது, எதிர்ப்பை மிகப் பணிவோடு ஏற்றுச் சீரிய முறையில் தமிழ் மறைகளில் எடுத்துக் காட்டுக்கள், மேற்கோள் கள் காட்டி விளக்குவது முதலாய அரிய விடயங்களை எல்லாம் தீபம் தாங்கி வருவது கண்டு மனம் களிக்கிறது. அதன் புனிதப் பணி சைவம் கூறும் நல்வாழ்வு மலர வழிகாட்ட வேண்டுகின் றேன். ''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்'' என்பது திரு ஞானியின் மணிவாக்கு.

மேலும் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் வரும் கண்டனங்களை ஏற்று அவற்றிற்குப் பன்னிரு திருமுறைகளிலும், பதினன்கு சாஸ்திரங்களிலும், பத்திப் பாடல்களிலும் ஆதாரங்கள் காட்டி விளக்கங்கள் கூறிவருவது சாலச் சிறந்த முறையாகும். அவற்றிற்கு மேல் மறுப்புக்கள் எழா. அவ்வாறே கண்டனங் களும் ஆதாரமுடையனவாக இருத்தல் வேண்டும், திருந்தவும் பலனடையவும், ஆராயவும் இடமுண்டு. அவர் சொன்னார் இவர் செய்தார் என்று கூறுவனவெல்லாம் குதர்க்கம். மனபூ சல்களின் விளைவே''ஆழ்க தீயதெல்லாம்''

சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள்
பிரதம குரு
ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் தேவஸ்தானம்
கொழும்பு - 13

திரு வை. நல்லையா,
ஆசிரியர், சந்திரதீபம்.

அவர்கட்கு.

சிவபெருமானருளால் சர்வாபீஷ்டமுமுண்டாகுக. தங்கள் சந்திரதீபம் கிரமமாக எனக்கு வருகின்றது. சார்வரிதீபம் சந்திரம்; என்பது சந்திரன் இரவை இருட்டை நீக்கி வெளிச்சத் தால் பிரகாசிப்பிக்கிறான். அது போல் சைவ சமயத்தில் உண் மைகளை இருட்டில் மூழ்கவிடாமல் யாரும் தெரிந்து கொள்ளக் கூடியதாகச் சந்திரதீபம் தன் ஒளியால் பிரகாசிப்பிக்கிறது. இது பல்லாண்டு நற்றொண்டு செய்ய இறைவனை வேண்டித் தங்களை யும் சந்திரதீபத்தையும் ஆசீர்வதிக்கிறேன்.

வைதீக சைவம் வாழ்க

இப்படிக்கு,
சி. குஞ்சிதபாதக்குருக்கள்.

சமய வளர்ச்சிக்கு இருப்பிடம் ஆலயம். ஆன்மா லயமாகு மிடம். தன்னை மறந்து, தன்னுமங் கெட்டுத் தலைப்படுமிடம். ஐம்புலன்களையும் ஒருமுகப் படுத்தித் தியானம் செய்யுமிடம். உலக போகங்களில் சிக்கித் துன்பத்தில் மூழ்கியுறுலும் உயிர்கள் ஒரு பொழுதேனும் பத்திச்சிரத்தையோடு விரதம் பூண்டு, பூவும் நீரும் காண்டு வழிபாடு செய்யுமிடம். பிறவிப் பிணியைத் தீர் குமிடம். தூய்மையும், அமைதியும், ஆறுதலும், சாந்தமும் நில வுமிடம். ஆன்மா லயமாவதற்கு ஆன்றோர் தந்த அருள் நிலை யம் இன்று கலியின் வசப்பட்டுக் கலங்கி இருப்பது கவலைக்கிட மானது. முற்றும் வேத பாராயணமும், ஆகமக் கிரியைகளும் நிகழவேண்டியதற்குப் பதில் போலி வேஷமும், வேடிக்கைக் கூத் துக்களும் நிறைந்த இடமாக மாறி வருகிறது என்று தீபம் கூறு வது சிந்தனைக்குரியது.

கோயில் பெரியது சிறியது என்பதில் பொருள் இல்லை. கோயில் பெரு நிலை யடைய சூழ் நிலை வகுத்துக் கொடுத் தல் வேண்டும். திரு நின்றவூர் பூசலார் நீண்ட நாள் நினைந்து கட்டிய கோயிலையும் இராச சிம்ம பல்லவ மன்னன் கட்டிய பெருங் கோயிலையும் சிந்தித்துப் பாருங்கள். சிவஞா னம் ஒருவர் கொடுக்க மற்றவர் வேண்டும் பண்டமாற்றுப் பொருளல்ல. அது தவத்தால் பெறுவது. அவன் காட்டக் காணுதன வெல்லாம் காண்பது. கண்டறியாதன கண்டேன் என்பதெல்லாம் அவன் காட்டக் கண்டவை. இவ்வாறு சிவ ஞானம் இருக்க கோயில்களில் பெருமுழக்கங்கள் செய்கிறார்கள், ஒலி பெருக்கிகள் மூலம் ஒலிப்பதிவுகள் பிரசங்கங்கள் பரிசில். வழங்கல்கள் பட்டம் வழங்கல் பாராட்டுக்கள் பட்டாடை போர்த்தல் முதலியன இவற்றிற்கெல்லாம் கால நேர இடங் கள் உண்டு. கோயிற் திருக்கூட்டத்தில் இக் கூத்துக்கள் எல் லாம் தவிர்க்கப் பட வேண்டும் என்று கூறுவது பிழையா? திருவருளில் தோய்ந்து வரச் செல்பவர்கள் சேற்றில் தோய்ந் து வர வழிவகுக்கலாமா. சிவசம்பந்தம் பெற முயல்பவர்கள் வேண்டுவது அவனருளே யன்றி வேறொன்றுமில்லை. மணிவா சகம் ஓரிடத்தில் வானேயும் பெறல் வேண்டேன் மண் ஆள் வான் மதித்துமிரேன் என்கின்றார்.

காலத்துக் கேற்ற கோலம் என்றால் சைவம் சாம்பார் அல்ல அது ஒப்பற்ற தனிச்சுவை உடையது என்று தீபம் கூறுகிறது. மேலும் தீபம் சுடர் விட்டு விளங்க வேண்டுகின்றேன்

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள
வே. தியாகராசா

பேரன்புடையீர்!

வணக்கம். தாங்கள் அனுப்பிய அஞ்சல் அட்டையும் தீபச் சுடர் 3 4 5 முதலியனவும் கிடைக்கப் பெற்றேன். நன்றி நான் இதற்கு முன் தீபச் சுடர்கள் எவையும் பெறவில்லை. ஆகையால் தாங்கள் அனுப்பியவையை விட மிகுதி ஏனைய சுடர்களையும் அனுப்பி வைப்பது மல்லாமல் தொடர்ந்தும் சுடர்களை அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றேன்.

மொட்டைக் கடிதங்கட்கும் கல் எறிகட்கும் அஞ்சாது தற்பொழுது சைவம் இருக்கும் அவல நிலையையும் பட்டதா ரிகள் முதலாளிமார் மடாதிபதிகள் பெரியோர்கள் எனப்படு வோரின் முக மூடிகளைக் கிழித்து சரியான வழியில் தீபம் சைவ சமயிகளை இட்டுச் செல்லும் பணியை பாராட்டாது இருக்கமுடியாது, தீபத்தால் அறியாமையையும் அநீதியையும் கபட நாடகங்களையும் சுட்டு எரித்து சைவத்தை தழைத்து ஓங்கச் செய்வது தீபத்தின் பணியாகும். வாழ்க சந்திரதீபம் மேன்மை கொள் சைவநீதி.

அன்புள்ள
செ குமாரசுவாமி

# தீபம் சுட்ட சூட்டில் சினிமாப் பாடல் நீக்கம்

## பொங்கலில் சினிமாப்பாடி சதுர்த்தியில் நீக்கியமையைப் பாராட்டு கின்றோம். கோவிலை கோவிலாம் படி நடத்த திருப்பணிச்சபை யாரே நினையுங்கள். இறைவன் சந்நிதியில் வஞ்சனைக்கும் சூழ்ச்சிக்கும் கொடுமைக்கும் இடமளியாதீர்.

சினிமாப் பாடலை ஒலிபெருக்கி மூலம் கோவில் ஒன்றில் பாடி அது கேட்டு மகிழ்ந்து தமது பாதகச் செயலை வஞ்சனையின் சூழ்ச் சியை நன்நெறிப்பட வாழ வேண்டிய இளைஞர் சமுதாயத்தை தீய வழிகளில் ஒழுகும் படி தூண்டி இது காறும் தமது பிழைப்பையும் புகழையும் பெருக்கி நின்ற சீலம் என்றதின் கருத்தே அறியாத ஒரு குருக்களும் அவருக்கு உடந்தையாகி அவர் சொன்னபடி நடக்கும் திருப்பணிச் சபையார் ஒரு சிலரும் சென்ற முறை நமது தீபம் கண் டு திகைத்து வேதனைப் பட்டனர். தீபத்தை கையில் ஏந்திய வண் ணம் எல்லாரையும் குடிகாறன் என்கின்றார் இந்தப் பத்திரிகையா ளர்: மக்களே திரளுங்கள் நடவடிக்கை எடுங்கள் என்று [illegible] அலறினர் குருக்கள். அதில் எழுதியது என்ன [illegible] வாசித்து உணர முடியாத மக்கள் கூட்டம் திரண்டு கொண்டது. எங்களை இப்படியும் சொல்லலாமோ எங்கள் குருக்களையும் குடிகாறன் என்னலாமோ என வீடு வீடாக உடன் உடன் ஓடினர் ஒருபகுதி நமது இல்லத்தை நோக்கி நகர்ந்தது. சில பெரியோர்கள் அவர்க்கு நற் புத்தி சொல்லித் தடுத்து நிறுத்தினர்.

இவை இப்படியாக குருக்களின் பணியாளரான தலைவரும் அவர் வெற்றிலை போட்ட வாயுடனும் நின்று தன் அருச்சனையைச் செய்ய வைக்கும் காரிய தரிசியும் நம்மீது சினமேற்கொண்டு திருப்பணிச்சபை யை அன்று பின்னேரம் கூட்டினர். கூட்டத்திற்கு நம்மீது சினந்து [illegible] கொண்ட இளைஞர் சிலரும் நாங்கள் குடித்தாலும் குடிகாரர் என்று

ம ப பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லிக் காட்டல் சரியோ என்று வேதனைப் பட்ட ஒரு சிலரும் குருக்களும் திருப்பணிச் சபையில் அமர்ந்தனர்.

ஒருபத்திரிகை யாளர்க்கு கண்டனம் தெரிவிக்க இக்கோவிலில் முதன் முறையாக இப்படியான திடீர்க் கூட்டம் கூட்டப்பட்டது. அஃதிருப்ப இந்தக்கோவில் திருபணிச்சபையாரின் சில தில்லுமுல்லுகள் குருக்களது அனுசாரச் செய்கைகள் சிலவற்றை நாம் எடுத்து இந்த உலகிற்கு காட்ட வேண்டியது எனது கடமை. ஏன் என்றல் நமது சைவ நெறிமிகவும் கீழ்மையான நிலையில் கொண்டுவந்து விடப்பட்டுள்ளது என்பது எனது துணிபு. இதற்காக எனது உயிர் நீங்கவேண்டி வந்தாலும் தீயவழிகளான செய்வினை சூனியச் செயல்களால் நான் தாக்குண்டு வேதனையுற வரினும் அன்றி வேறு எத்துயரம் வரினும் நான் எம் பெருமானது அருள் செறிந்த ஆலயங்கள் நன்கு நிலைப்படவேண்டும் என விரும்பி என் பணி செய்பவன். இந்த ஒரு பணியிலே இவர் எனக்கு உதவியவர் இவர் என் உறவினர் இவர் எனக்கு பொருள் ஈந்தவர் இதைச் சொன்னல் இவர் அடிப்பார் இவர் என்னை முடிப்பார் இவரால் தொந்தரவு வரும் என்று நான் பயப்படப்போறவன் அன்று: நான் யாருடனும் பகை கொள்ளவில்லை. அன்றியும் உறவு கொள்ளவில்லை.

நான் இன்று காலை நவாலியூர் சிந்தாமணி விநாயகப் பெருமான் ஆலயத்திருமுன்றில் நின்ற போது அங்கு அர்ச்சனை செய்யவந்த அந்தண இளைஞர் ஒருவர் என்னை நோக்கி ஐயோ பாருங்கள் நீங்கள் சொல்வதை நாம் ஏற்கத்தான் வேண்டும். ஏன் என்றல் உண்மை யாம்படி இந்த ஒலி பெருக்கி மின் ஒளி வந்தபின் எங்கள் கோவிலின் புனிதம் கெட்டுவிட்டது. இவைவரமுன்பு கோவிலில் இருந்த புனிதம் இன்று இல்லை. இதனை நாம் உணரத்தான் வேண்டும் என்றர். இப்படியாக இந்த வகை சொல்ல வேண்டி வந்ததை நான் திருவருளின் செயலாகவே ஏற்கவேண்டி உள்ளது. ஏன் எனில் எனக்கு எழுதப்பட்ட மாற்றுப்பேர் வழி கடிதமும் பல பயமுறுத்தல்களையும் இலட்சுமி காந்தனைப் போல் நீரும் ஆகப்போறீர் என்று நேரில் எனக்கு எச்சரித்த என் அயலவர் சிலருடைய தீய வழியின் கொடும் வார்த்தைகளையும் நினைந்து; இதென்னடா இது கோவிலில் குருக்கள் உட்பட திருப்பணி செய்யவரும் அவர்கள் சீலமில்லாத பாதகச் செயலைத் துணிந்து செய்கின்றர். ஐயோ இறைவன் இருப்பிடத்து இது ஆகாது இதை நீக்குங்கள் என்று சொன்னல் எனது உயிரை நீக்க அறிவிலாத அந்தணரும் அவரது தீய வழியை உகந்த மக்களும் முயலுவதா?

என்னிடம் ஓர் தம்பிரான் சுவாமி பட்டத்திருப்பவர் புன்னலைக் கட்டுவனில் எனது பத்திரிகையைப் பெற்று நீங்கள் சொல்வது சரி நாங்கள் இதைச் சொன்னல் நம்பாடு ஆபத்து. நீங்கள் துணிந்து சொல்கின்றீர். நாம் பயந்து சொல்லவில்லை என்றவர். அதுமட்டோ ஏழாலைக்கிராமத்தைச் சேர்ந்த ஒரு பண்டிதரும் அவர் சொன்ன அதேமாதிரிச் சொன்னவர். ஆகவே நாம் பெருமக்கள் அனைவரும் இது தவறு என்று உணர்ந்திருந்தாலும் சொல்லத்துணிந்திடாது இருந்த நிலையை எனது அயலில் உள்ள பிள்ளையார் கோவில் அர்ச்சகரும் அவருக்கு வாய்ப்பான அறிவிலாத மக்களின் நடத்தையாலும் தெளிந்து கொண்டு மனம் வேதனைப்பட்டுக் கொண்டு சென்ற நேரமே சிந்தாமணி விநாயகராலய முன்றில் எமக்கு இந்த வார்த்தை கிடைத்தது.

நான் என்ன செய்யலாம் கோவிலில் இருப்பவர்யார். கோவில் என்றல் என்ன என்று தெரியாதமக்களிடம் கோவில் நிர்வாகங்கள் பூசை உரிமைகள் கொடுக்கப்பட்டுள்ளன. பிறமதக்கோவில்களில் நடக்கும் வழிபாட்டு முறைகளையும் எமது கோவிலில் நடக்கும் முறைகளையும் அவதானித்தால் முழுவதும் நாம் வெட்கப்படவேண்டிய நிலைக்கு நமது கோவில்கள் வந்துள்ளன.

கோவிலில் நடக்க வேண்டிய நல்ல செயலை உணர்ந்து மக்களை நன் நெறிப்படுத்தல் முதற் கண் குருவினுடைய கடமை. அடுத்து கோவிலில் பிரசங்க மூலம் மக்களை நன்நெறிப்படுத்த உபதேசம் செய்ய வரும் பிரசங்கி மாரின் கடமை. இன்று இந்த இருபிரிவினரும் தாம் நல்லதைச் சொன்னல் மக்கள் தம்மை அடுத்த முறை விரும்பார் என்றதற்காக சிலர் ஓர் இருவார்த்தை மேல் வாரியாகச் சொல்லிப் போனல் மக்கள் என் நினைப்பார்கள்? அவரோ அவவோ சொல்லுறர்தான். ஆனல் அதிலை என்ன மற்ற முறை கூப்பிட்டா வருவ தானே! அல்லது காசை நூற்றுக்கு ஐம்பதைக் கூட்டினல் எதுவும் சரி என்றதாக வந்து கொண்டது.

நான் தம்மையே கண்டித்தேன் பூசை செய்யமாட்டேன் என மறுத்த குருக்கள் ஆசை மச்சானே பாட மடி மீது தலைவைத்து உறங்குவது பாட சுருங்கனி மாலுபாட இது கோவிலில் போடாதீர் அப்படியாயின் நான் பூசை செய்யேன் என மறுத்திருந்தால் நாம் உண்மையில் பாராட்டியிருப்போம். பிழை செய்ய தான் பார்த்திருந்து விட்டு பிழை செய்வது தவறு என்று சொன்னல் அதற்கு பூசை செய்ய மாட்டேன் எனக் குருக்கள் சொல்லுகிறர். அதுவன்றி இவர் ஒரு அங்கொடைக் கேஸ் என்று எழுதுகிறர். கூட்டுறவுக் கடையில் கொள்ளையடித்தவர் என்று என்னைச் சொல்லிக் கண்டபாட்டில் வைது ஊர்மக்களை என்னுடன் பகைமையாக்குகின்றர். வீடு வீடாகச் சொல்லி அன்று குருக்கள் அலைந்தார். திருப்பணிச் சபைத் தலைவர் அரசாங்க சேவையில் இருந்து இளைப்பாறியவர். அவர்க்கு ஒவ்வொன்றையும் நன்கு தீமானிக்கும் ஆற்றல் உடையவராக இ க்க வேண்டும். அதை விடுத்து குருக்கள் ஏதோ சொல்லிப் போட்டார் என்று பறந்து சென்று திருப்ப • ச்சபைக்குத் தலைமை தாங்கி குருக்களுடன் சேர்ந்து வேறு ஆத்திரங் கொண்ட சிலருடனும் சேர்ந்து நம்மை இழிந்த வார்த்தைகளால் தாக்குவதா?

சரி நான் தான் ஏதோ அக்கோவிலில் நடந்த தவற்றையும் அதற்கு முழுக்க உடந்தையாயிருந்த வரையும் கொஞ்சம் உணரும் படி கடிந்து சொன்னல் பதில் என்னை அடிக்க இளைஞரைத் தூண்டி விடுவதா? அடுத்து இவர் தலைமை தாங்கி நடத்திய திருப்பணிச்சபையில் யார் இந்த விசரன் இப்படிச் சந்திர தீபம் என்னும் பேப்பரை நடத்துபவன் எனச் சொல்வதா? இது தானு ஓர் அனுபவத்தால் அதுவும் பல கால அநுபவத்தை அரசாங்கத்தில் இருந்து பெற்றவரின் செயல். அங்கிருந்த இளைஞர் சிலர் என்னை விசரன் பனியன் என்று கோயில் முன் மண்டபத்தில் இருந்து பேச குருக்களும் தலையாட்டி மகிழ்ந்து தலைவரும் தலையசைத்து மகிழ்வதா? இது தானு கோவில்? உண்மையாம் படி எம் யாழ்ப்பாண மக்களே உணருங்கள் இது ஒரு கோவிலா அல்லது பாடசாலையா அல்லது வேறு கொட்டிலா? இத்தகைய அபசாரச் செய்கைக்கு கோவிலா இடம் கொடுப்பது. நான் என்ன செய்து விட்டேன். நான் யாருக்கும் அடித்து விட்டேனு? அல்லது வசைமாரி சொன்னேனு திட்டினேனு? எங்காகிலும் ஒரு வார்த்தையை அப்படி எனது எந்த விதமான பத்திரிகையில் காட்ட முடியுமோ. எனது பத்திரிகையில் என் கண்ணல் நேரில் கண்டவற்றையும் காதால் கேட்டவற்றையும் மிகு அவதானத்துடன் தெளிந்து அறிந்த பின்பு தான் எழுதுபவன். உலகில் மது அருந்துபவர் இல்லையா? மது அருந்துவோரை நீர் மது அருந்துபவர் என்று சொன்னல் அது வசை மாரி பாடுவதா?

உலகில் சில நன்மைகளை ஊக்குவிக்கும் பொருட்டு தீய வழிகளை விடுமாறு கடிந்து சொல்வது மரபு. அது தேசத்து நடைபெற்று வருவது. இந்த திருப்பணிச்சபையே ஒலிபெருக்கி [illegible] விப்பதைக் கட்டுப் படுத்த வேண்டுமென்று இருப்ப[illegible]ல் இருபதாயிரம் ருபாய் சேர்த்து அதை தம்மிடமே வைத்து திருப்பணிச் சபையிடம் ஒப்படைக்க விரும்பாது தமது வியாபாரத்துறைகட்கு பாவிக்கும் முதலாளிமார் செய்வது சரியா? ஒரு திருப்பணிச் சபை ஒன்றைத் தெரிந்து கொண்டால் அச்சபைகளின் தீர்மானங்கட்கு கட்டுப் படவேண்டியது அறிவில் சிறந்த எவருடைய கடனுமாகும். அதை விடுத்து அந்த திருப்பணிச்சபையை இல்லாமல் செய்ய அக்கோவிலில் மிகவும் கீழ்மையான அற்பத்தனமான செயல்களைச் செய்வதா? இதற்கு குருக்களும் உடந்தையாக இருப்பதா?

இந்த இருபதாயிரம் ரூபா முதலீடு செய்து இது காறும் உழைத்த வட்டியோ? லாபமோ தாம் கொண்டு ஏழையான என்னை விசரன் பனியன் காசில்லாதவன் என்று கூறித் திரிவதா. இதுதானு இறைவன் திருமுன்பு நடைபெறும் செயல்?.

பெரியோர்களே! ஆறுமுகநாவலருக்குச் சிலை கட்டினீர் சிவபாதசுந்தனர்க்கு விழா எடுக்கின்றீர். அவர்கள் இன்று இருந்திருந்தால் இத்தகைய அருவருக்கத் தகுந்த செயல் கோவில் முன்றலில் நடைபெறப் பார்த்திருப்பாரா? கண்டனம் தெரிவித்திருக்க மாட்டாரா? ஆறுமுகநாவலர் இருந்தால் சினிமா நடிகையரான பெண்கள் கோவிலில் வந்து பாட மேடை போட்டு அமர மூலமூர்த்தியின் இருப்பின் உயர்விற்கு மேலாக மேடை அமைத்திருப்ப அதில் அவர் இருப்ப பார்த்திருந்து சரி என்பாரா? நாவலர் வழி நாவலர் வழி என்று பண்டித மணிகள் முதல் பலரும் கதறுகின்றீரே? நாவலர் கண்ட வழி அல்லது காட்டிய வழிகள் இதுவாமோ?. நாவலர் வழி பிழையாக மாற நீங்கள் இன்னமும் இன்னமும் பட்டம் பெறுகிறீரே.

எனது பத்திரிகையில் மூகப்பில் என்ன வருகின்றது. எப்பொழுதும் தமிழ் வேதமாய தேவாரத்தை தாங்கி வருகின்றது. நானும் என் முகப்பில் ஓர் சினிமா நடிகையைப் போட்டு அல்லது சினிமாவில் நடித்த பிரசங்கியார் திருமுருக கிருபானந்தவாரியாரைப் போட்டு அல்லது தம்பிரான் சுவாமிகள் படத்தையோ அவரால் சிவநெறிக்காவலர் எனப் பட்டம் சூட்டப் பட்ட கொடைவள்ளலின் படத்தைப் போட்டிருந்தால் நீங்களும் நிசசயமாக வாங்கிப் படிப்பீர்கள்.

இன்று கல்கி ஆனந்த விகடன் கலைமகள் கல்கண்டு குண்டுசி குமுதம் இப்பத்திரிகைகளை நம்மக்கள் அப்பத்திரிகைகளில் நிர்ணயித்த விலையிலும் பதின் மடங்கு பொருள் கொடுத்து வாங்குகின்றனர். இவற்றை வாங்க கடைக்கு கடை அலைகின்றனர்.

இவை யாவும் ஆற்றேட்ட நீருடன் சேர்ந்து போவன போன்றன. ஆனல் நமது பத்திரிகைத் தொண்டு எதிர் நீச்சலாகவே இன்று உள்ளது. அன்று சமணரும் சம்பந்த சுவாமிகளுடன் செய்த வாதத்தில் சமணரது ஓலை ஆற்றில் அள்ளுண்டதும் சம்பந்த சுவாமிகளுடைய ஏடு ஆற்றில் எதிர்ந்தோடியதை நன்கு விளங்கிக் கொண்டால் இந்த உண்மை புலனுகும். சமணர் ஆற்றில் தம் ஓலை நீருடன் சேர்ந்து ஓடும் படியான தன்மை அச்சமயம் மக்கள் மனம் விரும்பிய வகை அமையும் சமயம் என்றும் சைவம் அப்படியல்லாது மக்களின் மாற்றமான மனத்தை மாறு வழி செல்ல விடாது தடுத்து நிறுத்தி உண்மை வழிக்கு ஆளாக்கும் சமயம் என்பதும் காட்டப்பட்டது.

நான் உண்மையாம் படி எல்லாவற்றையும் நன்கு விளங்கிக் கொண்டு தான் எழுத முற்படுபவன். இன்றைய குருக்கள் இந்தக் கோவிலில் எப்படி வந்தவர். யார் இவரை இது காறும் பராமரித்து சம்பளம் கொடுத்தது. இந்தக் குருக்கள் தாமும் மனைவியும் வீட்டை விட்டு போகவேண்டிய நேரம் இவர்களது பிள்ளைகளை யார் பராமரித்தது என்பதை தற்கால நிலையில் குருக்களும் நினைக்கப் போறவர் அன்று. அல்லது அவர்க்காக இன்று பரிகின்ற வட்டி கோடா பல சரக்கு முதலாளிகள் உணரப் போறவர் அன்று. பெரும்பாலும் இருபதாயிரம் ரூபாவை ஊரில் சேர்த்து தாம் அதைப் பாவித்துக் கொண்டு ஊர்மக்களது திருப்பணிச் சபையிடம் ஒப்படைக்க விரும்பாது தாமே அதற்கு பொறுப்பென்று சொல்லி ஊர்மக்களால் தெரியப்பட்ட சபை எடுக்கும் நல்ல நடவடிக்கைகளை முறியடிக்கும் நோக்கமாக இந்த காசுக் காற முதலாளி மார் காட்டிய ஒத்துழையாமை இயக்கமே காரியதரிசியை பதவி துறக்கும் படி வைத்தது. இதனைக் குருக்களும் இரகசியமாகவே நடத்தி இங்காலும் தலையாட்டி அங்காலும் தலையாட்டி வந்தவர்.

திருப்பணிச் சபையார் வேத ஆகம விதிப்படி கோவிலை நடத்த வேண்டும் என்று விரும்பி தமது பணமே செலவழித்து குருக்களுக்கு சம்பளமும் கொடுக்க வஞ்சனையால் மிகுந்த சில மக்கள் இந்த திருப்பணிச்சபையாரின் நல் ஒழுக்க நிலைகளைக் கெடுக்க குருக்களையும் தம் வசப்படுத்தி முழுக்க முழுக்க கோவில் வைரவப் பொங்கலில் காமச் சுவை மிகுந்த பாடலை ஒலிபெருக்கி மூலம் போட்டு வேடிக்கை பார்த்திருந்தால் நாம் அதைப் பார்த்துக் கொண்டு இருக்கவா சொல்லுகின்றீர்.

இந்தக் கோவிலில் புராணம் படிபட வெளி மண்டபத்தில் மது அருந்திய நிலையில் மக்கள் குழுமி இருந்து கூக்குரல் இட்டால் இதை நிற்பாட்ட முடியாது குருக்களும் அவர்களுடன் சேர்ந்திருந்து வேடிக்கைக் கதை பேசினல் நாம் அதை நல்ல செயல் என்று சொல்லவா போகின்றேம்.

அடுத்து முன்பு ஒரு நாள் சூரன்போர் ஒன்றில் மது அருந்தி வந்து குழப்பம் விளைவிக்க முற்பட்ட போது குருக்கள் ஒலிபெருக்கி மூலம் அவர்களை அமைதியுடன் இருக்குமாறு கேட்க வில்லையோ?

மது அருந்துவோர் மத்தியில் கம்பீரமாக நின்று விமரிசனம் செய்வார் குருக்கள் என்றல் குருக்கள் குடிக்கிறர் அல்லது ஊர்மக்கள் குடிக்கிறர் பொங்கப் போனர் எல்லாரும் குடித்து விட்டு வந்து பொங்கினர் என்று குருக்களும் கத்துவரா? இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கோவிலைத் தாம் கைப்பற்ற முயலும் முதலாளிமாருடையவரதும் அவரது உறவினருடைய வீண் கதைகளையும் எம் ஊர்மக்கள் நம்பினல் எமது ஊர்மக்களைப் பற்றிப் பிறர் என்ன நினைப்பர். இதற்காக என்னைத் தொலைக்க வேண்டும் என்று வஞ்சகரது வலையிற் சிக்கிய மக்களும் வீண் கதை பேசினல் நான் என்ன செய்யலாம். முதலாளிகளினதும் அவர்க்கே முழுவதும் உதவியாக இருக்கும் குருக்களினதும் அவரது உறவினரதும் நோக்கம் இந்தக் கோவிலைத் தங்கள் நிர்வாகத்தில் வைத்துக் கொண்டு தமது புகழை வெளிப் படுத்தும் நோக்கமாகும். இதை நாம் உணராமல் இல்லை.

ஆகவே நான் இக்கோவில் அருகாமையில் உள்ளவன். நான் இக்கோவிலில் எத்தனையோ தொண்டுகள் செய்தவன். திருப்பணிகட்கு உதவியவன் ஆதலால் நான் ஒருபோதும் எனது ஊர்மக்களைத் தவருகச் சொல்லேன். என் மீது யாரும் குறை விளங்க வேண்டாம். இன்று இந்த இருபதாயிரம் ரூபாவையும் கோவிலுக்கு எனப் பலரிடமும் வாங்கி அதை மக்கள் தெரிந்த திருப்பணிச் சபையிடம் ஒப்படைக்க விரும்பாது தாம் அந்தக் காசைத் தமது வசம் வைத்துத் தம் வியாபாரத்தை நடத்தும் முதலாளிமாரையும் அவர் கோவிலைக் களியாட்டமாக்க முயல்வதையும் அவர்க்கு உடந்தையான குருக்களையும் நான் உலக மக்கள் முன் காட்டல் என் பணி. என்னை அடிக்க உதைக்கப் பயமுறுத்த ஆட்களை அவர்கள் ஏவாது தாம் செய்தது சரி என்று கோவிலில் நடந்த பாதகச் செயல்களை குருக்களும் அவரும் நிருத்தல் தான் மனிதப்பண்பு.

---

இப் பத்திரிகை கொக்குவில் மேற்கு உயரப்புலத்தில் இருக்கும் இலங்கை [illegible] பதிப்பகத்தின் சார்பில் அதன் உரிமையாளர் திரு. [illegible] அவர்களால் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org